بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

தொகுதி 3

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

இதழ் 22

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

15 ரமலான் 1439 ஹிஜ்ரி கமரி 31 ஹிஜ்ரத் 1397 ஹிஜ்ரி ஷம்ஸி

31 மே 2018


## அல்லாஹ்வின் கட்டளை

وَاَنۡفِقُوۡا فِیۡ سَبِیۡلِ اللّٰہِ

وَلَا تُلۡقُوۡا بِاَیۡدِیۡکُمۡ اِلَی التَّہۡلُکَۃِ ۚۖۛ

وَاَحۡسِنُوۡا ۚۛ اِنَّ اللّٰہَ یُحِبُّ الۡمُحۡسِنِیۡنَ

அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்யுங்கள். நீங்கள் உங்கள் கைகளாலேயே (உங்களை) அழிவிற்காளாக்கிக் கொள்ளாதீர்கள். நன்மை செய்யுங்கள். அல்லாஹ் நிச்சயமாக நன்மை செய்பவர்களை நேசிக்கின்றான்.

(அதிகாரம் அல் பக்கரா : 196)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**ஸய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறியுள்ளார்கள்: 'நூஹ் நபியின் கப்பல்' என்ற நூலிலுள்ள நமது போதனை என்ற பகுதியை ஒவ்வோர் அஹ்மதியும் படிக்க வேண்டும். இன்னும் சொல்வதென்றால், 'நூஹ் நபியின் கப்பல்' என்ற நூலை முழுமையாகப் படிக்க வேண்டும்.**

**மன உறுதியுடன் பைஅத் என்னும் உடன்படிக்கையின்படி முழுமையாக செயல்படாமல், வெறும் நாவால் மாத்திரம் பைஅத்தை அங்கீகரிப்பதால் எவ்வித பலனும் உண்டாகப் போவதில்லை என்பதை அறிவீர்களாக. ஆகவே, எவர் எனது போதனையின்படி முழுமையாக செயல்படுகிறாரோ அவர் இறைவனால் வாக்குறுதி அளிக்கப்பட்ட எனது இல்லத்தில் நுழைந்து விடுகிறார். அவரை பற்றியே இறைவனது வார்த்தையில் اِنِّیۡ اُحَافِظُ کُلَّ مَنۡ فِی الدَّارِ என்ற வாக்குறுதி வழங்கப்பட்டிருக்கின்றது. அதாவது, உமது வீட்டின் நான்கு சுவர்களுக்குள் இருக்கும் ஒவ்வொருவரையும் நான் காப்பாற்றுவேன்.**

# 'நூஹ் நபியின் கப்பல்' என்ற நூலிலிருந்து வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுக்கள்

இரண்டாவது அடையாளம் பிளேக் நோயாகும். இறைவன் கூறுவதாவது, وَاِنۡ مِّنۡ قَرۡیَۃٍ اِلَّا نَحۡنُ مُہۡلِکُوۡہَا قَبۡلَ یَوۡمِ الۡقِیٰمَۃِ اَوۡ مُعَذِّبُوۡہَا இதன் பொருள்: இறுதி நாளுக்கு முன்னர் நாம் அழித்து விடாத அல்லது கடும் தண்டனை அளிக்காத எந்த ஊரும் (இப்பூமியின் மீது) இருக்காது. *(17:59)*

ஆகவே, வானமும் பூமியும் சாட்சியாக இருக்கும் பொருட்டு இறைவன் நாட்டில் தொடர் வண்டியையும் ஓட வைத்தான்; பிளேக்கையும் அனுப்பியுள்ளான். ஆகவே, இறைவனோடு போரிடாதீர்கள். இறைவனோடு போரிடுவது அறிவீனமாகும். இதற்கு முன்னர் இறைவன் ஆதமை கலீஃபாவாக ஆக்க விரும்பியபோது மலக்குகள் தடை செய்தார்கள். ஆனால், இறைவன் அவர்களின் கூற்றால் நின்று விட்டானா என்ன ? இப்போது இறைவன் இரண்டாவது ஆதாமைப் படைக்கும்போது اَرَدۡتُ اَنۡ اَسۡتَخۡلِفَ فَخَلَقۡتُ اٰدَمَ எனக் கூறினான். அதாவது, நான் கலீஃபாவை படைக்க நாடினேன். ஆகவே, நான் இந்த ஆதமை படைத்தேன். இப்போது சொல்லுங்கள். இறைவனது விருப்பத்தை உங்களால் தடை செய்ய முடியுமா ?

எனவே, நீங்கள் யூகங்கள் எனும் வெறும் குப்பைக் கூளங்களை ஏன் வெளிப்படுத்துகிறீர்கள் ? உறுதியான வழியை ஏன் மேற்கொள்வதில்லை ? நீங்கள் சோதனையில் வீழ்ந்து விடாதீர்கள். இறைவனது நாட்டத்தை தடைசெய்யக் கூடியவன் எவனுமில்லை என்பதனை நிச்சயமாக நினைவில் வையுங்கள். இவ்விதமாக சண்டை செய்வது தக்வா என்னும் இறையச்சத்திற்-குரிய வழிமுறை அல்ல. ஆயினும், உங்களுக்கு சந்தேகம் இருக்குமானால் இந்த முறைப்படி நீங்கள் செயல்படலாம்.

அதவாது, எனது கூற்றுப்படி செயல்படக்கூடியவர்களில் ஒரு கூட்டத்தினரை பிளேக்கிலிருந்து இரட்சிப்புப் பெறுவதற்கு நான் இறைவனிடம் இருந்து இல்ஹாம் மூலம் நற்செய்தி பெற்று அதனை அச்சிட்டு விநியோகம் செய்திருப்பதைப் போன்று உங்களது சமுதாயத்தினரைப் பற்றிய நலன்கள் உங்களது இதயங்களில் இருக்கிறதென்றால் நீங்களும் உங்களது மதத்தைச் சார்ந்தவர்கள் பிளேக்கிலிருந்து காப்பாற்றப்படுவார்கள் என்று இறைவனிடம் இருந்து நற்செய்தியைப் பெறுங்கள். பின்னர் இறைவன் உங்களோடு இருக்கிறான் என்று மக்கள் அறிந்து கொள்ளும் பொருட்டு அந்த நற்செய்தியை என்னைப் போன்று அச்சிட்டு பிரசுரங்கள் மூலம் வெளியிடுங்கள்.

மேலும், கிறித்தவர்களுக்கும் இந்த சந்தர்ப்பம் மிகவும் நல்ல ஒரு வாய்ப்பை அளிக்கக்கூடியதாய் இருக்கின்றது. இரட்சிப்பானது மஸீஹுடன் சம்பந்தப்பட்டதாகும் என்று எப்போதும் அவர்கள் கூறிவருகிறபடியால் இந்த சோதனைக்குரிய நாட்களில் பிளேக்கிலிருந்து கிறித்தவர்களுக்கு இரட்சிப்பு கிடைக்கச் செய்வது அவர்களது கடமையாகும். இந்த எல்லா கூட்டத்தார்களில் இருந்து எவருடைய பிரார்த்தனை அதிகமாக கேட்கப்பட்டதோ அதுவே ஏற்றுக் கொள்ளப்பட்டதாகும். இப்போது பூமியில் வீணாக வாக்குவாதம் செய்யாமல் பிளேக்கிலிருந்து இரட்சிப்புப் பெறவும், அவர்களின் உண்மை வெளியாகவும், தாங்கள் அதிகமாக அங்கீகரிக்கப்பட்டதை வெளிப்படுத்தவும் இறைவன் அனைவருக்கும் இந்த சந்தர்ப்பத்தை அளித்துள்ளான். குறிப்பாக மர்யமின் குமாரராகிய மஸீஹையே இவ்வுலகிற்கும் மறுமைக்கும் மீட்பாளராக ஏற்றிருக்கும் கிறித்தவ பாதிரிகள், மர்யமின் குமாரர் இவ்வுலகிற்கும் மறுமைக்கும் உரிமையானவர் என்று இதயப் பூர்வமாக நம்புகிறார்களென்றால் இவர்களது பாவத்தின் சுமையை அவர் ஏற்றுக் கொண்டதினால் உண்டான இரட்சிப்பின் முன்மாதிரியை இப்போது கண்டு கொள்வது கிறித்தவர்களின் உரிமையாகும்.

இவ்வாறு இது நம் உயர்வான அரசாங்கத்திற்கும் மிக எளிதாகலாம். அதாவது, தத்தமது மதங்களின் உண்மையின் மீது நம்பிக்கையை வைத்து வரும் இந்தியாவில் காணப்படும் பலவிதமான பிரிவினர்களும் அவர்கள் தத்தமது பிரிவினரை விடுவிப்பதற்காகவும் பிளேக்கிலிருந்து இரட்சிப்பு

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

கடந்த நாட்களில் ஜமாஅத்தின் ஒரு நல்லடியாரும் ஆலிமும் ஆகிய மதிப்பிற்குரிய உஸ்மான் சீனர் சாஹிபின் மரணம் நிகழ்ந்தது. إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ அல்லாஹ் அன்னாருக்கு தனது சிறப்பான இறை நியதியின் மூலம் சீனாவின் தொலை தூரப் பகுதியிலிருந்து வெளியேற்றி பாகிஸ்தான் செல்வதற்கும், அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொள்வதற்கும் அன்னாருக்கு பாக்கியம் வழங்கினான். அன்னாருடன் எவ்வாறெல்லாம் அல்லாஹ் நடந்து கொண்டான் என்பதையும், பின்னர் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொள்ளும் பாக்கியம் எப்படி கிடைத்தது? பின்னர் மார்க்க அறிவை எப்படி பெற்றார்? வாழ்க்கையை அர்ப்பணிக்க இறைவன் எப்படி வழிகாட்டினான்? என்பதைப் பற்றியும் அன்னார் தனது புத்தகத்தில் மிக விளக்கமாக விவரித்துள்ளார்கள்.

அன்னாரின் நிலைமைகள், வாழ்க்கை, தொண்டுகள் பற்றிய எவ்வளவு விஷயங்கள் உள்ளன என்றால் அதன் மூலம் ஒரு புத்தகமே எழுத முடியும். பாகிஸ்தானின் குத்தாமுல் அஹ்மதிய்யா இந்த பணியை சிறப்பாக செய்ய முடியும் என்பது எனது எண்ணமாகும். எவ்வாறிருப்பினும், அந்த எளிமையான மற்றும் ஜமாஅத்தின் நல்லடியாரும், முபல்லிக் மற்றும் ஆலிமாகிய இன்னும் சொல்வதென்றால், செயல் வடிவமாகத் திகழ்ந்த ஆலிமாகிய இறை நேசராகிய அன்னாரைப் பற்றி சுருக்கமாக எடுத்துரைப்பேன். அதில் பொதுவாக அனைவருக்கும், குறிப்பாக முபல்லிக்மார்களுக்கு பின்பற்றத்தக்க பல விஷயங்கள் உள்ளன. ஒவ்வோர் அஹ்மதிக்கும் அதில் பின்பற்றத்தக்க முன்மாதிரி உள்ளது.

மதிப்பிற்குரிய மர்ஹூம் முஹம்மது உஸ்மான் சூ சுங் ஷீ சாஹிப் அவர்களின் புகழ்ந்து போற்றத்தக்க நற்பண்புகளை எடுத்துக் கூறியவாறு அன்னாருக்காக ஹுஸூர் அவர்கள் ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைத்தார்கள்.

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்**
**27 ஏப்ரல் 2018** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1397 -ஆம் ஆண்டு **ஷஹாதத்** மாதம் **27 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ۔ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ۔ الرَّحْمٰنِ الرَّحِيْمِ۔ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ۔ إِيَّاكَ نَعْبُدُ
وَإِيَّاكَ نَسْتَعِيْنُ۔ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ۔ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ۔

கடந்த நாட்களில் ஜமாஅத்தின் ஒரு நல்லடியாரும் ஆலிமும் ஆகிய மதிப்பிற்குரிய உஸ்மான் சீனர் சாஹிபின் மரணம் நிகழ்ந்தது. إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

அல்லாஹ் அன்னாருக்கு தனது சிறப்பான இறை நியதியின் மூலம் சீனாவின் தொலை தூரப் பகுதியிலிருந்து வெளியேற்றி பாகிஸ்தான் செல்வதற்கும், அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொள்வதற்கும் அன்னாருக்கு பாக்கியம் வழங்கினான். அன்னாருடன் எவ்வாறெல்லாம் அல்லாஹ் நடந்து கொண்டான் என்பதையும், பின்னர் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொள்ளும் பாக்கியம் எப்படி கிடைத்தது? பின்னர் மார்க்க அறிவை எப்படி பெற்றார்? வாழ்க்கையை அர்ப்பணிக்க இறைவன் எப்படி வழிகாட்டினான்? என்பதைப் பற்றியும் அன்னார் தனது புத்தகத்தில் மிக விளக்கமாக விவரித்துள்ளார்கள். இந்த விரிவுரையை எடுத்துரைப்பதற்கு தற்போது நேரமில்லை. அன்னார் பல சந்தர்ப்பத்தில் அது குறித்து பலரிடம் பேசியுள்ளனர். மக்கள் அன்னாரை குறித்து சில விஷயங்களை எழுதியுள்ளார்கள். அவை மிக விரிவாக எழுதப்பட்டுள்ளன. அவை அனைத்தையும் எடுத்துரைப்பது இயலாத காரியமாகும். ஈமானை வலுவூட்டும் சம்பவங்களும் பல உள்ளன. அன்னாரின் நிலைமைகள், வாழ்க்கை, தொண்டுகள் பற்றிய எவ்வளவு விஷயங்கள் உள்ளன என்றால் அதன் மூலம் ஒரு புத்தகமே எழுத முடியும். பாகிஸ்தானின் குத்தாமுல் அஹ்மதிய்யா இந்த பணியை சிறப்பாக செய்ய முடியும் என்பது எனது எண்ணமாகும். எவ்வாறிருப்பினும், அந்த எளிமையான மற்றும் ஜமாஅத்தின் நல்லடியாரும், முபல்லிக் மற்றும் ஆலிமாகிய இன்னும் சொல்வதென்றால், செயல் வடிவமாகத் திகழ்ந்த ஆலிமாகிய இறை நேசராகிய அன்னாரைப் பற்றி சுருக்கமாக எடுத்துரைப்பேன். அதில் பொதுவாக அனைவருக்கும், குறிப்பாக முபல்லிக்மார்களுக்கு பின்பற்றத்தக்க பல விஷயங்கள் உள்ளன. ஒவ்வோர் அஹ்மதிக்கும் அதில் பின்பற்றத்தக்க முன்மாதிரி உள்ளது. பலரும் பல விஷயங்களை எழுதியுள்ளனர். நான் கூறியது போன்று சுருக்கமாக அன்னாரைப் பற்றி எடுத்துரைப்பேன்.

உஸ்மான் சீனர் சாஹிப் என்ற பெயரில் அன்னார் பிரபல்யம் அடைந்திருந்தார்கள். அன்னாரின் முழுப்பெயர் முஹம்மது உஸ்மான் சூ சுங் ஷீ சாஹிப் என்பதாகும். 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13 ஆம் தேதி அன்னாரின் மரணம் நிகழ்ந்தது. 1925 ஆம் ஆண்டு டிசம்பர் 13 ஆம் தேதி அன்னார் சீனாவிலுள்ள ஆன்கூயீ என்ற மாநிலத்தில் ஒரு முஸ்லிம் குடும்பத்தில் பிறந்தார்கள். உயர்நிலைப்பள்ளி கல்விக்குப் பிறகு 1946 –ல் நான்சங் யுனிவர்சிட்டியில் ஒரு வருட கால அன்வான்ஸ் கோர்ஸ் ஒன்றை பயின்றார்கள். அன்னாருக்கு அரசியல் படிப்பில் ஆர்வம் இருக்கவில்லை. எனவே சட்டம் மற்றும் மார்க்கத்தைப் பற்றி படிக்க விரும்பினார்கள். முதலில் துருக்கி நாட்டிற்குச் சென்று மார்க்கக் கல்வி கற்க விரும்பினார்கள். பின்னர் 1949 –ல் பாகிஸ்தான் சென்றார்கள். அன்னார் சுயமாக ஆய்வு செய்து பைஅத் செய்தார்கள். ஜாமிஆ அஹ்மதிய்யாவில் கல்வி கற்றார்கள். 1957 –ல் ஜாமிஆ அஹ்மதிய்யாவில் ஷஹாதத் என்ற முபல்லிக்மார்களுக்கான சிறிய கோர்ஸ் ஒன்றை கற்று தேர்ச்சி பெற்றார்கள். 1959 ஆகஸ்டு 16 ஆம் தேதி வாழ்க்கையை அர்ப்பணித்தார்கள். 1960 ஜனவரியில் அன்னார் பணி நியமனம் செய்யப்பட்டார்கள். அடுத்து முபல்லிக்மார்களுக்கான கோர்ஸை முழுமை செய்ய 1961 –ல் மீண்டும் ஜாமிஆவில் சேர்ந்தார்கள். 1964 –ல் ஷாஹித் பட்டம் பெற்றார்கள். பாகிஸ்தான் ரப்வாவிலும் கராச்சியிலும் தொண்டாற்றும் பாக்கியம் அன்னாருக்கு கிடைத்தது. 1966 –ல் சிங்கப்பூர் மற்றும் மலேசியாவில் தொண்டாற்றும் பாக்கியம் கிடைத்து அங்கு சென்றார்கள். மூன்றரை ஆண்டுகள் சிங்கப்பூரிலும் சில மாதங்கள் இந்தோனேஷியாவிலும் அன்னார் தொண்டாற்றினார்கள். 1970 –ல் மீண்டும் பாகிஸ்தான் திரும்பினார்கள். பின்னர் பல்வேறு இடங்களில் முபல்லிக் ஆக தொண்டாற்றினார். உம்ரா மற்றும் ஹஜ் செய்வதற்கான பாக்கியமும் பெற்றார்கள். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் ஹிஜ்ரத்திற்குப் பிறகு இங்கு இலண்டனில் பல அலுவலகங்கள் திறக்கப்பட்டன. பணிகளில் விரிவு ஏற்பட்டது. ஜமாஅத்தின் புத்தகங்களை மொழியாக்கம் செய்வதில் அதிக கவனம் ஏற்பட்டது. அப்போது சீனா டெஸ்கும் ஏற்படுத்தப்பட்டது. எனவே அன்னார் இலண்டன் அழைக்கப்பட்டார்கள். மேலும் அன்னாருக்கு புத்தகங்களை சீன மொழியில் மொழியாக்கம் செய்யும் வாய்ப்பு கிடைத்தது. அதில் மிக குறிப்பிடத்தக்க மொழியாக்கம் சீன திருக்குர்ஆன் மொழியாக்கம் ஆகும். ஜமாஅத்தின் கொள்கை மற்றும் போதனைகளை கொண்ட புத்தகங்களையும் அன்னார் சீன மொழியில் எழுதினார்கள். அன்னார் தமது நினைவாக தமது ஒரு மனைவியையும் ஒரு மகனையும் இரு மகள்களையும் விட்டுச் சென்றுள்ளார். திருக்குர்ஆனின் சீன மொழியாக்கத்தை பொருத்தவரை 1986 –ல் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் வழிகாட்டலின் படி அந்த பணியைத் தொடங்கினார்கள். அதே ஆண்டு அன்னார் பாகிஸ்தானிலிருந்து இலண்டன் அழைக்கப்பட்டார்கள். மேலும் நான்கு ஆண்டுகள் கடின உழைப்பிற்குப் பிறகு சீன மொழியாக்கம் முழுமையடைந்தது.

சீனர் சாஹிப் இது தொடர்பாக எழுதுகின்றார்கள்: திருக்குர்ஆன் சீன மொழியாக்கப் பணி மிக நீண்ட பணியாகும். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் அதனை ஜமாஅத் நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தின்போது வெளியிட வேண்டும் என வழிகாட்டியிருந்தார்கள். எனவே எனக்கு

மிகவும் கவலை ஏற்பட்டது. குறித்த நேரத்தில் பணி முடிவடைந்த விட வேண்டும் என நான் எண்ணினேன். தகுதி வாய்ந்த நபரை தேடினேன். அவர் சீன மொழிப்புலமை பெற்றவராகவும் ரிவியூ செய்யும் நபராகவும் இருக்க வேண்டும் என எண்ணினேன். ஒருவர் சீன மொழிப்புலமை பெற்றிருந்தும் அவர் மார்க்க அறிவு இல்லாதவராக இருந்தார். மார்க்க அறிவு இருந்தால் அவருக்கு சீன மொழிப்புலமை அற்றவராக இருந்தார். அது மிகக் கடினமான பணியாகும். எவ்வாறிருப்பினும், மொழியாக்கம் முழுமை அடைந்த பிறகு ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் வழிகாட்டலுக்கேற்ப சீனா மற்றும் சிங்கப்பூர் சென்று சீன மொழிப்புலமை பெற்றவர்களிடம் ஆலோசனை செய்தேன். அதனை மேலும் சிறப்பாக்கினேன். அல்லாஹ்வின் அருளால் மிகவும் தரம் வாய்ந்த சீன திருக்குர்ஆன் மொழியாக்கம் தயாரானது.

அன்னார் மிகவும் பணிவுடன் எழுதுகின் –றார்கள்: இது என்னால் இயலாத காரியமாகும். அல்லாஹ்வின் அருளால் மட்டுமே அந்த பணி சாத்தியமாயிற்று.

அன்னார் கூறுகின்றார்கள்: இதற்கு முன்னரும் சீன மொழியில் சில திருக்குர்ஆன் மொழியாக்கம் இருந்தன. அதன் பின்னரும் மொழியாக்கம் செய்யப்பட்டது. ஆனால் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மொழியாக்கம் என்பது தனித்தன்மை வாய்ந்ததாக இருந்தது. இந்த சிறப்பு வேறெவரின் மொழியாக்கத்திலும் இருந்திக்கவில்லை. மேலும் சீன மொழியாக்க குர்ஆன் வெளியான பிறகு சீனா மற்றும் இதர பல நாடுகளிலிருந்து ஏராளமான சீனர்களிடமிருந்து வரவேற்பு கடிதங்கள் வந்தன. அதில் இந்த மொழியாக்கம் சிறந்த மொழியாக்கம் என பாராட்டப்பட்டது. ஜமாஅத் சார்பாக செய்யப்பட்ட மொழியாக்கம் மிக பிரபல்யமாக இருந்தது. அதற்கு நிறைய டிமாண்டும் உள்ளது. பொதுவாக ஜமாஅத்தின் கொள்கை அதில் சேர்க்கப்பட்டு அதற்கேற்ப தஃப்ஸீர் செய்யப்பட்டுள்ளது என ஆட்சேபனை செய்யும் மக்களும் உள்ளனர். ஆனால் பெரும்பாலும் பலர், மொழியாக்கத்தை மிகவும் தரம் வாய்ந்தது என்றும், உயர்ந்தது என்றுமே பாராட்டியுள்ளார்கள். சீன நாட்டில் லின் சான்ங் என்ற பேராசிரியர் இந்த நூற்றாண்டில் சீன மொழியில் திருக்குர்அன் மொழியாக்கம் என்ற பெயரில் புத்தகம் ஒன்றை எழுதினார். அதில் நமது மொழியாக்கத்தையும் அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும் அதில் சுமார் 15 பக்கங்களில் நமது மொழியாக்கத்தை குறித்து விவரித்துள்ளார்.

பேராசிரியர் மிக விரிவாக நமது மொழியாக் –கத்தைப் பற்றி விவாதித்தவாறு கூறுகிறார்: பொதுவாக மொழியாக்கம் செய்கின்ற சாதாரண ஆலிம்கள் சில சொற்களுக்கு மொழியாக்கம் செய்வதில்லை. அதன் மொழியாக்கத்திற்கு உரிய இடத்தில் அதே அரபி சொல்லை அப்படியே எழுதி விடுகின்றனர். அல்லது அடிக்குறிப்பில் குறிப்பிடு –கின்றனர். அல்லது அந்த பகுதி அவர்களுக்கு சந்தேகத்திற்குரியது என குறிப்பிடுகின்றனர். ஆனால் உஸ்மான் சாஹிபின் மொழியாக்கத்தின் சிறப்புத்தன்மை என்னவென்றால், அன்னார் அதுபோன்ற பகுதிகளைக் கூட மொழியாக்கம் செய்துள்ளார். அது மட்டுமல்ல. எந்த ஆதாரத்தின் அடிப்படையில் அதற்கு மொழியாக்கம் செய்தாரோ அதனையும் அடிக்குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

பேராசிரியர் கூறுகின்றார்: திருக்குர்ஆன் மொழியாக்கம் தொடர்பாக நான் எனது கருத்தை கூறினேன். அதன் பிறகு பலமுறை நான் உஸ்மான் சாஹிபை சந்தித்தேன். நன்கு படித்த அஹ்மதி அல்லாத ஓர் அறிஞரின் கருத்தாகும். அவர் கூறுகின்றார்: இவர் ஒரு வெளிப்படையான மற்றும் எளிய பணிவுக் குணம் படைத்த மனிதர் ஆவார். மேலும், திருக்குர்ஆனின் கட்டளைகளின்படி செயல்படக் கூடியவர் ஆவார். நான் ரமலானில் அன்னாரை விருந்திற்கு அழைத்தேன். உஸ்மான் சாஹிப் நோன்பு வைத்துள்ளார். அன்னார் திருக்குர்ஆனை ஷரீஅத்தின் உயர்தரமான வேதமாகக் கருதி வந்தார். அவர்களின் திருக்குர்ஆனின் சில மொழியாக்கங்கள் எமது சீன சுன்னத் ஜமாஅத்தின் கொள்கைகளுக்கு ஏற்புடையதல்ல என்றபோதிலும் இந்த நபர் ஏகத்துவவாதி என்பதையும், நபி (ஸல்) அவர்கள் மீது அன்பு கொண்டவர் என்பதையும், இறை கட்டளைகளை பேணக்கூடியவர் என்பதையும் எம்மால் மறுக்க முடியாது. சீனர் சாஹிப் அவர்கள் தமது மேற்பார்வையில் சீன புத்தகங்கள் பலவற்றை தயார் செய்தார்கள். அதில் Introduction to morality சீன மொழியில் எழுதியுள்ளார்கள். 7 புத்தகங்களை அன்னார் சொந்தமாக எழுதினார்கள். 35 ற்கும் மேற்பட்ட புத்தகங்களை மொழியாக்கம் செய்துள்ளார்கள். An outline of Ahmadiyya Muslim Jamath, Outline of Islam, Fundadmental Questions and Answers about Islam, Islamic Concept of Jihad and Ahmadiyya Muslim Jamath, Ahmadiyya Muslim Jamath Contribution to the World போன்ற புத்தகங்களை சீன மொழியில் எழுதியுள்ளார். மேலும் மார்க்கத்தின் அவசியம் என்ன? என்பது பற்றியும் புத்தகம் எழுதியுள்ளார். இதுவே அன்னாரின் அறிவுசார்ந்த பணிகளின் சுருக்கமான குறிப்பு ஆகும்.

குடும்ப வாழ்க்கையைப் பற்றி அன்னாரின் மனைவி கூறுகின்றார்: எனக்கு வரனாக அவரை பற்றிய தகவல் பாகிஸ்தானிலிருந்து வந்தது. ஆனால் வயது வித்தியாசம் காரணமாக எனது தந்தை அன்னாரின் வரனிற்கு சம்மதம் தெரிவிக்கவில்லை. அன்னாரின் மனைவியும் சீனர் ஆவார். அப்போது எனக்கு வயது 20 ஆகும். உஸ்மான் சாஹிப் வயது 50 ஆக இருந்தது. எனது தந்தை பல மாதங்கள் வரை அந்த வரனைப் பற்றி என்னிடம் கூறவில்லை. பின்னர்தான் கூறினார்கள். மேலும் நான் முடிவெடுக்கும் வகையில் அந்த கடிதத்தை எனக்கு முன் வைத்து விட்டார்கள்.

நான் கனவில் கண்டேன். அதாவது, வெளி நாட்டில் வெளியில் பெரிய மைதானத்தில் வெறுங்கையுடன் நிற்கிறேன். இனி என்ன நடக்கும் என்ற எண்ணத்தில் உள்ளேன். அப்போது நான் வெண்ணிற ஆடை உடுத்திய ஒரு மனிதரை கண்டேன். பின்னர் நான் ஒரு குரலை கேட்டேன். உமது அனைத்து தேவைகளும் இவர் மூலம் நிறைவேறும் எனக் கூறப்பட்டது. வரன் தொடர்பாக இந்த கடிதத்தை பார்த்த பிறகுதான் அந்த கனவை கண்டேன். உஸ்மான் சாஹிப் கனவில் வெண்ணிற ஆடை அணிந்திருந்தார்கள். பின்னர் உஸ்மான் சாஹிபின் புகைப்படம் எனக்கு காட்டப்பட்ட போது இதே மனிதரையே நான் கனவில் கண்டேன் எனக் கூறினேன்.

இவ்வாறு அந்த வரனிற்கு சம்மதம் தெரிவித்தேன். நான்கு ஆண்டுகள் வரை வரன் உறுதி செய்யப்பட்ட நிலையிலேயே இருந்தேன். பாஸ்போர்ட் கிடைக்காமல் இருந்தது. நாட்டின் நிலைமை மிக மோசமாக இருந்து வந்தது. அரசியல் நிலவரம் மற்றும் கலாச்சாரப் புரட்சியின் காரணமாக அங்கு இருப்பது கஷ்டமாக இருந்தது. உஸ்மான் சாஹிப் அவர்கள் கனவு ஒன்றை கண்டார்கள். மாவஸே துங் என்ற குறிப்பிட்ட நபர் ஒருவர் மரணமடைந்த பிறகு உமது மனைவி இல்லத்திற்கு வருவாள் என கூறப்பட்டது. கனவில் குறிப்பிட்ட அந்த நபர் அப்போது எவ்வகையினும் நோய்வாய்ப்படவில்லை. அவர் சீனாவின் சேர்மனாக இருந்தார். ஆரோக்கியமானவராக இருந்தார். எவ்வாறிருப்பினும் அவர் கருதினார். கனவு எப்போது நிறைவேறும் என தெரியவில்லையே; நீண்ட நாள் ஆகி விடும் எனக் கருதினார். அப்போது சீனர் சாஹிப் கனவில் மாவஸே துங்கிற்கு கடிதம் எழுதி அனுப்புவதற்காக சென்று கொண்டிருந்தார்கள். வழிப்பாதையிலேயே அந்த நபரின் மரணச் செய்தி அன்னாருக்கு கிடைத்தது.

அதன் பிறகு அன்னாரின் மனைவி கூறுகின்றார்: எனக்கும் சில நாட்களிலேயே பாஸ்போர்ட் கிடைத்தது. நான் பாஸ்போர்ட்டை எடுத்துக் கொண்டு வீட்டிற்கு வந்தேன். அந்த நாள் இரவு மிகக் கடுமையான மழை பெய்தது. அதற்கு முன்பு மிகவும் வறட்சி நிலவி வந்தது. எந்த அளவுக்கு மழை பெய்தது என்றால் பூமி தண்ணீரால் நிரம்பியது. ஓர் அஹ்மதி அல்லாத அண்டை வீட்டுக்காரர் ஒருவர் கூறினார். நீங்கள் முன்பே வந்திருந்தால் எங்களுடைய வறட்சியும் முன்னரே நீங்கி இருக்கும்.

ஆக, ஒரு வாரத்திற்குப் பிறகு நான் சீனாவை விட்டு புறப்பட்டேன். என்னிடத்தில் எந்த பொருளும் இல்லை. இரண்டு ஜோடி ஆடைகள் மட்டுமே இருந்தன. அதனை உஸ்மான் சாஹிபின் தம்பி எனக்கு வழங்கி இருந்தார்கள். அது தவிர Soya Sauce –ன் சில Cube –களே இருந்தன. 1978 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 12 ஆம் தேதி அன்று நான் கராச்சி வந்தடைந்தேன். அங்கு சவுத்ரி அஹ்மது முக்தார் சாஹிப் நிக்காஹ் நடத்தினார்கள். அன்னாரே எனது 'வலி' ஆக இருந்தார்கள். மூன்றாம் நாள் நாங்கள் சீனத் தூதரகம் செல்ல இருந்தோம். இரயில் மூலம் நாங்கள் சென்றோம். ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தனித்தனியாக அமர்வதற்கான ஏற்பாடு இருந்தது. எனவே கடைசி ஸ்டேஷனில் எல்லாரும் இறங்கிய பிறகு இறங்கி சந்திப்போம் என முடிவு செய்யப்பட்டிருந்தது. நானோ புதியவள்; எனது பெட்டியிலுள்ள அனைவரும் இறங்கி, பெட்டி காலியானவுடன் இடத்தை அடைந்து விட்டதாக

எண்ணி முன்னரே இறங்கி விட்டேன். இறங்கிய பிறகுதான் எனக்கு விஷயம் புரிந்தது. ஆயினும் மீண்டும் இரயிலில் என்னால் ஏற முடியவில்லை. கூட்ட நெரிசல் அதிகமாக இருந்தது. நான் மிகவும் கவலைக்குள்ளானேன். நல்ல வேளையாக நான் அங்கு சுற்றித் திரிவதைப் பார்த்த ஒரு போலீஸ் அதிகாரி என்னிடம் வந்தார். என்னை சீனத் தூதரகத்திற்கு அனுப்பி வைத்தார். நான் அப்போது புர்கா அணிந்திருந்தேன். தூதரக அதிகாரி –களுக்கு நான் சீனர் என்பதில் ஐயம் இருந்தது. அவர்கள் சீனப் பத்திரிகை ஒன்றை கொண்டு வந்து அதனை வாசிக்கும் படி கூறினார்கள். நான் படித்துக் காட்டினேன். பின்னர் டாக்ஸிக்கான ஏற்பாடு செய்யப்பட்டது. அது ஒரு பெரிய சம்பவம். எப்படியோ அவர் நல்ல படியாக வந்து சேர்ந்தார். ஓர் அஹ்மதியை பார்த்தார். பின்னர் டாக்ஸி ஓட்டுனர் வழிப்பாதையை அவரிடம் கேட்டுக் கொண்டவாறு அன்னாரை வீடு வரை கொண்டு வந்து சேர்த்த பின் டாக்ஸி ஓட்டுனர் மிகவும் ஆச்சரியப்பட்டுப் போனார். நான் இப்படி ஓர் அயல் நாட்டுப் பெண் வழிதவறிய பிறகு மீண்டும் குடும்பத்துடன் வந்து இணைந்ததைக் கண்டதில்லை எனக் கூறினார். எப்படி இருப்பினும் இது எங்களின் இல்லற வாழ்க்கையின் ஆரம்ப நாட்கள் ஆகும் என்று அன்னார் கூறுகின்றார்.

உஸ்மான் சாஹிப் தொடர்பாக அன்னாரது மனைவி கூறுகின்றார்: நல்ல கணவராக இருந்தார். மாறாக அவர்கள் எனது ஆன்மீக குரு ஆவார்கள். நான் பாகிஸ்தான் வந்தபோது முதலில் எனக்கு தொழுகையைக் கற்றுக் கொடுத்தார்கள். பள்ளிவாசயிலில் தொழுகை நடத்திய பிறகு வீட்டிற்கு வந்து எனக்கு தொழுகை நடத்துவார்கள். பல மணி நேரங்கள் தொழுகையில் கூற வேண்டிய அரபி வார்த்தைகளைக் கற்றுக் கொடுப்பார்கள். ஒவ்வொரு வார்த்தையையும் வரியையும் கற்றுக் கொடுத்தார்கள். இதனை பயிற்சி செய்து வர வேண்டும் என எனக்கு அறிவுரை செய்தார்கள். மறந்து விட்டால், துஆவின் புத்தகத்தை அருகில் வைத்து கொள்ளுங்கள் எனக் கூறினார்கள். ஆறு மாதங்களில் எனக்கு யஸ்ஸர்னல் குர்ஆன் கற்றுத் தந்தார்கள். பின்னர் எனக்கு குர்ஆன் கற்றுக் கொடுக்க ஆரம்பித்தார். அத்துடன் எனது ஆர்வம் நிலைபெற மொழியாக்கங்களைக் கற்றுக் கொடுத்தார்கள். பெரும் பொறுமை சாலி, கருத்தின் ஆழம் வரை சென்று பெரும் உதாரணங்களுடன் புரிய வைப்பார்கள். இரத்த உறவை மிகவும் பேணி வந்தார்கள். அன்னார் தனது தாயை சீனாவிலிருந்து பாகிஸ்தான் அழைத்து வந்து தம்முடன் தங்க வைத்தார்கள். மேலும் நல்ல தொண்டாற்றினார். சில முறை எங்களின் சூழல் மிகவும் கடினமாக இருந்தது. பகலில் ஒரு பாட்டில் மட்டுமே பால் கிடைத்து வந்தது. அன்னார் அதனையும் தனது தாய்க்கு கொடுத்து விடுவார். பயணத்தில் எங்கு சென்றாலும் தனது தாயை தம்முடன் வைத்துக் கொள்வார். தாய்க்கு நல்ல சேவை செய்தார்கள். அன்னாரின் முழு வாழ்நாளும் அன்னாரிடம் கொடுக்கப்பட்ட பணிகளைச் சார்ந்ததாக இருந்தது. அன்னாரின் உடல் நிலை நன்றாக இருந்தால் இரவில் பணி செய்தபடியே பொழுது விடிந்து விடும். குடும்பத்தில் அன்னாரின் முக்கியப் பணி குழந்தைகளுக்கு சிறப்பான கல்வி வழங்குவதாகும். அதன் பிறகு சின்னச் சின்ன பணிகளை மேற்கொள்வார். தனது ஆடை, உணவு போன்றவற்றை எளிமையாக இருக்கும் வகையில் தேர்வு செய்வார்.

அடுத்து அன்னாரின் மூத்த மகள் டாக்டர் குர்அதுல் அய்ன் எழுதுகின்றார்: எனது தந்தையின் சில சிறப்புகளை வார்த்தைகளில் வடிப்பது கடினமாகும். மிகவும் பரிவு கொண்டவர்; கடின உழைப்பாளி; எப்போதும் நல்லதையே எதிர்பார்ப்பவர்; பணிவுக் குணம் படைத்தவர்; தம்முடன் தனது அனைத்து பிள்ளைகளையும் மகன் மற்றும் மகள்களையும் மருமகள்களையும் கலந்துரையாடல்களில் இணைத்துக் கொள்வார். எங்களுடைய பள்ளிக் கல்வியில் ஆர்வம் கொண்டார்கள். ஆசிரியர்களின் கருத்தை கேட்டறிவார்கள்.

உங்களின் வாழ்க்கையின் நோக்கம் அல்லது அல்லாஹ் இவ்வுலகில் உங்களை படைத்ததன் நோக்கம் தப்லீக் செய்வதாகும். எனவே, தப்லீக் செய்யுங்கள். குறிப்பாக சீனர்களுக்கு தப்லீக் செய்யுங்கள் என அடிக்கடி எங்களிடம் கூறி வருவார். ஆன்மீகத்திலும் அறிவைப் பெருக்குவதிலும் முன்னேற்றம் அடைந்து கொண்டே செல்ல வேண்டும் என அடிக்கடி எங்களுக்கு அறிவுரை செய்வார்கள். உங்களை பார்க்கும்போது உங்களின் அமல்கள் மற்றும் நடைமுறையின் காரணமாக மக்களுக்கு இறைவனின் இருப்பு உள்ளது என்ற எண்ணம் வர வேண்டும். ஏனென்றால் எந்த பிள்ளைகள் இறை நம்பிக்கை கொண்டவர்களாக இருப்பார்களோ அவர்கள் மற்ற பிள்ளைகளை விட மிகவும் நல்லவர்களாக இருப்பர். எந்த பணியை தொடங்கினாலும் அதில் நிரந்தரத் தன்மை இருக்க வேண்டும் என்று எப்போதும் எங்களுக்கு அறிவுரை வழங்கி வருவார்கள். சிறு பருவத்தில் ஒருபோதும் எங்களை திட்டியதில்லை. தொழுகை விவகாரத்தில் மட்டுமே கடினம் காட்டுவார்கள். இன்னும் கூறப்போனால் பழக்கங்களை ஏற்படுத்த ஐவேளையும் பள்ளிக்கு அழைத்துச் செல்வார்கள் விடுமுறை காலத்தில் படிப்பதற்கு மார்க்கப் புத்தகங்களை கொடுத்து படிக்கக் கூறுவார்கள். பின்னர் டெஸ்ட் வைப்பார்கள்.

அன்னாரின் மகள் தொடர்ந்து கூறுகின்றார்: 'கிஷ்தி நூஹ்' என்ற மிகப் பழமையான நூல் ஒன்றை கொடுத்தார்கள். இதனை படியுங்கள். இதன் பொருள் ஒன்றும் கஷ்டமானதல்ல. மற்ற புத்தகங்களைப் படிப்பது உங்களுக்கு கஷ்டமாக இருக்கக் கூடும். ஆனால் இது அப்படி அல்ல. நான் ஜாமிஆவில் சேர்ந்த பிறகு நான் படித்த முதல் புத்தகம் இதுதான் என்றும் எங்களிடம் கூறினார்கள். அடுத்து பர்தாவைப் பற்றியும் அன்னாருக்கு கவலை இருந்தது. ஏதாவது ஒரு நிர்பந்தம் ஏற்பட்டால் அந்நிலையில் மேக்அப் இன்றி இருக்க வேண்டும் என்று கூறப்பட்டது. அன்னார் நான்காவது கலீஃபாவிடம் அனுமதி கேட்டு அவர்கள் அளித்த அனுமதியின்படி நடந்து கொண்டார்கள். பர்தாவுடன் கல்வி பயில வேண்டும் என்ற நிபந்தனையுடன் அனுமதி வழங்கினார்கள். மேலும் வகுப்பறையில் அதிக நிர்பந்தம் ஏற்பட்டால் ஒழிய பர்தாவைக் கழட்டக் கூடாது. மேலும் பர்தாவை கழற்றும் சூழல் ஏற்பட்டால் மேக்அப் இன்றி இருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் மகளுக்கு University –யில் படிக்க அனுமதி வழங்கினார்கள்.

அதே போன்று அன்னாரின் சிறிய மகளும் கூறுகின்றார்: நீங்கள் எப்போதும் நிலவைப் பெறுவதற்கு முயல வேண்டும். இவ்வாறு நிலவு கிடைக்காமல் போனால் நட்சத்திரங்கள் உங்களுக்கு கிடைத்து விடும். உங்களின் இலட்சியங்கள் எப்போதும் மிக உயர்வானதாக இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தி வருவார்கள். முகத்தில் தண்ணீர் தெளித்தவாறு தொழுகைக்கு எழுப்புவார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மற்றும் கலீஃபாக்களின் புத்தகங்களை படிக்குமாறு எங்களிடம் கூறுவார்கள். பல மணி நேரங்கள் எங்களுடன் அமர்ந்து பேசி எங்களின் கேள்விகளுக்குப் பதிலளிப்பார்கள். சின்னஞ்சிறு விஷயத்திலும் கூட ஒருபோதும் எரிச்சல் அடையமாட்டார்கள். இது பெற்றோர்களுக்கு ஒரு படிப்பினை ஆகும்.

அல்லாஹ் வழங்கிய உங்களின் அனைத்து ஆற்றல்களையும் செயல்படுத்துங்கள். அதனை வீணடிக்காதீர்கள். என்ன செய்தாலும் அதனை இறைவனின் வணக்கத்திற்காக செய்ய வேண்டும் என்று எப்போதும் எங்களிடம் கூறினார்கள். ஆன்மீக முன்னேற்றத்தை ஓர் உதாரணத்துடன் விளக்குவார்கள். அதாவது ஆன்மீக முன்னேற்றம் என்பது ஏணியைப் போன்றதாகும். சிலமுறை தாமதம் ஏற்படும். எனினும் கூடுதல் உயரத்தைக் கடப்பதன் பக்கம் பாதங்கள் முன்னேற வேண்டும் என்று கூறினார்கள். அன்னார் எங்களுக்கு எளிமையையும் தம்மை விட பிறருக்கு முன்னுரிமை வழங்குதல் போன்ற விஷயங்களையும் கற்றுக் கொடுத்தார்கள். அன்னார் இஸ்லாமாபாத் ஜமாஅத்தின் சத்ர் ஆக இருந்தார்கள். அப்போது அஹ்மதி வீடுகளின் பராமரிப்புப் பணி நடந்தது. எனது வீட்டில் அந்த பணி கடைசியாக நடக்கட்டும் எனக் கூறினார்கள்.

அன்னாரின் மகன் தாவூத் சாஹிப் கூறுகின்றார்: ஜாமிஆவில் தேர்வு நடைபெற்று கொண்டிருக்கும்போது எனது தந்தையின் பெரிய சகோதரர் மற்றும் தந்தையின் மரணச் செய்தி டெலிகிராம் மூலமாக அவர்களுக்கு கிடைத்தது. இந்த வேதனை மிக்க செய்தி என்பது ஜாமிஆவின் ஏனைய தேர்வுகளைப் போன்று இதுவும் ஒரு தேர்வாகும் எனக் கருதினார்கள். இவ்வாறு சிந்தித்தபடி குறித்த நேரத்தில் தேர்வை எழுதினார்கள். நேரத்தை வீணடிக்கவில்லை. இதனை அன்னாரே என்னிடம் கூறினார்கள்.

சீனர்களுக்கு தப்லீக் செய்வதில் அன்னாருக்கு ஆர்வம் அதிகம் இருந்தது. எந்த நிகழ்ச்சிக்கு சென்றாலும் மக்களுக்கு அஹ்மதியத்தின் அறிமுகத்தை செய்து வைப்பார்கள். பிரசுரங்களை சக்கர நாற்காலியில் வருகின்ற நிலையிலும் விநியோகம் செய்வார்கள்.

நோய்வாய்ப்பட்டதால் நடக்க முடியாமல் இருந்தது. சக்கர நாற்காலியிலும் பிரசுரங்கள் வைத்திருப்பார்கள்.

அடுத்து அன்னாரது மகன் கூறுகின்றார்: நான் சிறுவராக இருந்தபோது அன்னாரின் அலுவலகத்திற்குச் சென்று விடுவேன். அங்கிருந்து பேனா மற்றும் பென்சிலை எடுக்க முயல்வேன். அப்போது அலுவலகத்தில் இருக்கும் பேனா, பென்சிலை நான் பயன்படுத்துவதை அனுமதிக்க மாட்டார்கள். எனது தாயிடம், இவனுக்கு பேனாவின் தேவை உள்ளது. இவனுக்கு தனியாக பேனா வாங்கிக் கொடுங்கள் எனக் கூறுவார்கள். எனக்கு ஏதாவது புகைப்பட நகல் எடுக்க வேண்டுமென்றால் வீட்டிலிருந்து தனியாக தாள் கொண்டு வாருங்கள். பின்னர் இந்த இயந்திரம் மூலம் புகைப்பட நகல் எடுக்கலாம் என அன்னார் கூறுவார்கள்.

இறைவனின் பண்புப் பெயர்களை மனனம் செய்யும் படி அறிவுறுத்துவார்கள். அல்லாஹ்விற்கு எத்தனை பண்புப் பெயர்கள் உள்ளனவோ அதனை ஞாபகம் செய்ய வேண்டும் என்பதற்காக அது தொடர்பாக சீன மொழியில் கவிதை ஒன்றை எழுதினார்கள். அதில் அல்லாஹ்வின் சுமார் 100 நற்பண்புகள் இடம் பெற்றிருந்தன. இந்த கவிதையை இரவில் தினமும் படித்து வந்தார்கள். விளையாட்டு வடிவில் சகோதர, சகோதரிகளாகிய எங்கள் மத்தியில் அல்லாஹ்வின் பண்புப் பெயர்களை மனனம் செய்யும் போட்டி நடத்துவார்கள். பின்னர் பரிசும் வழங்குவார்கள்.

சில மாதங்கள் முன்னர் ஓரிரு மாதங்கள் இருக்கும். அன்னார் என்னை சந்திக்க மருமகன் மற்றும் குடும்பத்துடன் வந்திருந்தார். அன்னாரின் மருமகன் எழுதுகின்றார்: என்னால் அங்கு பேச முடியாது. எனவே மூன்று பாயிண்டுகளை நான் எழுதித் தருவேன் என்று கூறினார். அது என்னவென்றால் நான் பலவீனமானவனாக உள்ளேன். என்னால் சுயம் எழுந்து நிற்க முடியாது. எனவே நான் சக்கர நாற்காலியில் அமர்ந்துள்ளேன். அதற்காக நான் வருந்துகிறேன். இவ்வாறு கிலாஃபத்திற்கு மிகவும் கண்ணியம் வழங்கினார். இரண்டாவது விஷயம், எனது இறுதி மூச்சு வரை நான் தப்லீக் செய்ய வேண்டும். அதற்காக துஆ செய்யுங்கள். அனுமதியும் வழங்குகள் என்பதாகும். மூன்றாவது, என்னால் அலுவலகம் செல்ல இயலாது. வீட்டில் ஜமாஅத் பணிகளை செய்ய அனுமதி தாருங்கள் என வேண்டினார். அவருக்கு பணி செய்யும் ஆர்வம் இருந்தது. அன்னார் வீட்டிலிருந்து ஓய்வெடுக்க விரும்பவில்லை.

அன்னார் ஹஜ்ஜிற்கு சென்றிருந்தார்கள். அன்னாரின் மருமகனும் அவருடன் இருந்தார். உஸ்மான் சாஹிப் தனது துஆவின் உணர்வுகளை சீன மொழியில் எழுதி வைத்திருந்தார். அவர்கள் கூறினார்கள்: நான் ஏன் இந்த துஆவின் உணர்வுகளை சீன மொழியில் எழுதுகிறேன் என்றால் இதிலிருந்து எதிர்வரும் நாட்களிலும் பயன் பெற விரும்புகிறேன். ஹஜ் சந்தர்ப்பத்தில் எங்கள் குழுவில் உஸ்மான் சாஹிபிடம் நீங்கள் என்ன எழுதிக் கொண்டு வருகின்றீர்கள்? எனக் கேட்டனர். நான் சீன சமுதாயத்திற்காக துஆ செய்கிறேன். அவர்கள் விரைவாக உண்மை இஸ்லாத்தின் பக்கம் விரைந்து வர வேண்டும் என்பதே எனது துஆ ஆகும் எனக் கூறினார்கள். கேள்வி கேட்ட நபர்கள் வியந்து போனார்கள். சுயம் எழுந்து நடக்க முடியாத முதுமையை அடைந்த மனிதன் தனது சமுதாயத்தின் நேர்வழிக்காக கவலை கொள்கிறாரா? என ஆச்சரியப்பட்டார்கள்.

அடுத்து சீனர் சாஹிப் தனது சூழலை ஓரிடத்தில் எழுதுகின்றார்: சீனாவில் புத்தமதக் கொள்கை மற்றும் கன்ஃபூஸியஸ் கொள்கை, தானிய கொள்கைகள் பல ஒன்றுடன் ஒன்று கலந்து விட்டன. ஏராளமான சீனர்கள் ஒரே சமயத்தில் மூன்று மதங்களையும் பின்பற்றுகிறார்கள். ஆனால் தற்போதைய காலத்தில் கலப்பட போதனைகளை ஒன்று கூட்டி சுயம் ஒரு மார்க்கத்தை உருவாக்கிக் கொண்டனர். இந்த மார்க்கத்தில் மனிதனின் நல்லொழுக்க நிலைகளுக்கு சிறப்பான கவனம் கொடுக்கப்பட்டுள்ளது. மூன்று சீன பத்திரிகைகளில் எனது நேர்காணல் வெளியானது. மலேசியன் தேயிஸம் என்ற புதிய மார்க்கத்தைச் சார்ந்த சிலர் என்னிடம் ஒரு வேண்டுகோளை விடுத்தார்கள். இஸ்லாம் நல்லொழுக்கங்களை குறித்து என்ன கூறுகிறது? என்பதை சீன மொழியில் எழுதுமாறு கூறினார்கள். எனவே நான் ஒரு கட்டுரை எழுதி அதை அனுப்பி வைத்தேன்.

அதற்கு அவர்கள் பதில் கடிதம் அனுப்பினார்கள். நீங்கள் இஸ்லாத்தைப் பற்றிய மகத்துவமிக்க கட்டுரை ஒன்றை எங்களுக்கு வழங்கியுள்ளீர்கள். நாங்கள் உங்களுக்கு மிகவும் நன்றி செலுத்துகின்றோம். நடுநிலையுடன் இஸ்லாத்தின் சிறப்புகளை எடுத்துரைத்துள்ளீர்கள். மிக நுட்பமான முறையில் கட்டுரையை விவரித்துள்ளீர்கள். இதிலிருந்து நீங்கள் மிக நன்றாக மார்க்கக் கல்வியைப் பெற்றுள்ளீர்கள் என்பது தெரிகின்றது என்று அதில் அவர்கள் எழுதியிருந்தனர்.

சீன மக்களுக்கு இஸ்லாத்தைப் பற்றி அதிகம் தெரியாது. காரணம் சீன மொழியில் இஸ்லாம் தப்லீக் செய்யப்படவில்லை. இப்போது நீங்கள் சிங்கப்பூரில் இஸ்லாத்தைப் பரப்ப வந்துள்ளீர்கள். இஸ்லாம் இந்த நாடுகளில் சீன மொழியில் பரவட்டும். சீன மக்களும் அதன் பரக்கத்துக்களை பெற்றுக் கொள்ளட்டும் என்றும் அதில் எழுதப்பட்டிருந்தது.

சீனர் சாஹிபின் வகுப்புத் தோழர் ஆகாஸ் ஸைபுல்லாஹ் சாஹிப் கூறுகின்றார்கள்: உஸ்மான் சீனர் சாஹிப் தமது இளமைக் காலத்தில் முற்றிலும் தூய்மையானவராகவும், நல்லொழுக்கமிக்கவராகவும் திகழ்ந்தார்கள். உருக்கத்துடன் தொழுவார்கள். மிகவும் துடிப்புடன் பணிவுடன் துஆ செய்வார்கள். நஃபில் நோன்பு நோற்பார்கள். நஃபில் தொழுகைகளை தொழும் பழக்கம் கொண்டவர். தஸ்ஃபீஹ் மற்றும் இறைவனை புகழ்தல் மற்றும் இஸ்திக்ஃபார் செய்தல் ஆகியவற்றில் மிகவும் துடிப்புடன் செயல்பட்டு வந்தார். அஹ்மதிய்யத்தின் அருட்கொடை கிடைத்ததற்கு எப்போதும் நன்றியுணர்வை வெளிப்படுத்தி வருவார்.

நான் உண்மையான சாட்சியை வழங்குகிறேன். மாணவப் பருவத்தில் சிலமுறை துக்கம் மற்றும் சிந்தனையின் காரணமாக அவர்களின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடும். தனது தாய் மற்றும் சகோதரர்களை சந்திப்பது தொடர்பாகவும், அந்த நாட்டில் நிலவிய சூழல் தொடர்பாகவும் வேதனையை வெளிப்படுத்துவார்கள். மேலும் மிகவும் உருக்கத்துடன் தனது உண்மையான படைப்பாளனாகிய அல்லாஹ்விடம் தமது தேவைகளை வேண்டுவார்கள். இந்தக் காட்சி இந்த முதுமைப் பருவத்தில் எனக்கு ஏக்கத்தை தருகின்றது.

அந்த இறை அடியார் சோதனைக்குரிய காலக்கட்டத்தில் செய்த துஆவை அல்லாஹ் ஏற்றுக் கொண்டான். அஹ்மதிய்யத்தின் பரக்கத்தின் காரணமாக அல்லாஹ் அன்னாருக்கு எல்லாவற்றையும் கொடுத்தான். ஏனைய மனிதர்களும் அவரது துஆவிலிருந்து பயன் பெற்றனர். மாணவப் பருவத்தில் மவ்லவி குலாம் ரஸூல் சாஹிப் ராஜிக்கி, மவ்லவி அப்துல் லத்தீஃப் சாஹிப் பஹாவல்பூரீ இதுபோன்ற ஏனைய சான்றோர்களுடன் பழகும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. அவர்களிடத்தில் துஆவிற்கு விண்ணப்பம் செய்வதற்கும், பின்னர் துஆ ஒப்புக் கொள்ளப்பட்டதன் காட்சியைக் காண்பதற்கும் பாக்கியம் கிடைத்தது. என்னால் மிக எச்சரிக்கையுடனும் அனுபவத்துடனும் கூற முடியும். நான் குறிப்பிட்ட சான்றோர்களின் தொழுகைகளில் இருந்த உருக்கம், பணிகளின் தாக்கம் உஸ்மான் சூ சுங் ஷீ சாஹிபின் தொழுகைகளிலும், துஆக்களிலும் இருந்தது. நான் ஒன்றிரண்டு தனிப்பட்ட விஷயங்களில் அன்னாருடைய துஆ ஒப்புக் கொள்ளப்பட்டதற்கான காட்சியைக் கண்டுள்ளேன்.

மேலும் எழுதுகின்றார்கள்: அன்னார் எப்போதும் எனக்கும் என்னுடன் இருப்பவர்களுக்கும் துஆ செய்வதற்கான அறிவுரை செய்து வருவார்கள். அன்னார் மிகவும் அகப்பார்வை கொண்டவராக இருந்தார்கள். ஜமாஅத்தின் நிர்வாக ரீதியிலான கருத்துக்களை வழங்குவதில் மிக எச்சரிக்கையுடன் இருப்பார்கள். தானும் ஜமாஅத் அமைப்பிற்கு கண்ணியம் அளிப்பார்கள். அன்னாரை சந்திக்கும் நபர்கள் மற்றும் நண்பர்களுக்கு அதற்கான அறிவுரையை வழங்கினார்கள். கிலாஃபத்துடன் முழுமையான பற்றும் தொடர்பும் கொண்டிருந்தார்கள். அன்னாரிடத்தில் துஆவிற்காக யார் கூறினாலும் காலத்தின் கலீஃபாவிற்கு துஆவிற்கான விண்ணப்பம் அனுப்பினீர்களா? எனக் கேட்பார்கள்.

இங்கு இஸ்லாமாபாத் சத்ர் சாஹிப் அன்னாரை பற்றி கூறுகின்றார்கள்: அன்னாருக்கு ஜமாஅத்தான தொழுகைகளை நிறைவேற்றுவதில் ஆர்வம் இருந்தது. எந்த அளவுக்கென்றால் பள்ளிவாயிலிருந்து அன்னார் வீட்டிற்குச் செல்ல சில நிமிடங்களே ஆகும். ஆயினும் அன்னாரின் கடைசிக் காலத்தில் வீட்டிற்குச் செல்ல மிகவும் சிரமப்பட்டு செல்வார்கள். நின்று நின்று வீட்டிற்குச் செல்வார்கள். வழியில் பலமுறை நின்று மூச்சு வாங்க மிகவும் சிரமப்படுவார்கள். எனினும் பள்ளிவாயிலுக்கு வந்து சென்றார்கள்.

இந்நிலையிலும் தொழுகையை ஜம்உ செய்ததை நான் கண்டதேயில்லை.

ஒருமுறை மக்ரிப் மற்றும் இஷா தொழுகைக்–கான இடைவெளி மிகக் குறைவாகவே இருந்தது. எனவே நீங்கள் வீட்டிற்குச் செல்வதற்கு பகரமாக பள்ளிவாயிலிலேயே தங்கி விடுங்கள். அல்லது ஜம்உ செய்து விடுங்கள் எனக் கூறினேன். அதற்கு அன்னார், நடந்து சென்று வருவதால் பயிற்சி ஆகி விடுகின்றது என்று கூறினார்கள். அது மட்டுமல்ல; வீட்டிற்குச் சென்று பள்ளிவாயிலுக்கு மீண்டும் வருவதால் நற்கூலியும் கிடைக்கின்றது. எனவே நான் வீட்டிற்குச் சென்று விடுகிறேன் என்று பதிலளித்தார்கள்.

ரஷீது பஷீருத்தீன் சாஹிப் அபூஸஹ்பீ அவர்கள் கூறுகின்றார்கள்: அஹ்மதி, அஹ்மதி அல்லாதவர் அனைவருமே அவரது துஆவிலிருந்து பயன் பெற்றார்கள். கராச்சியில் அன்னார் முரப்பியாக இருந்தபோது அஹ்மதியல்லாத ஆண்கள், பெண்கள் பல விஷயங்களில் அன்னாரிடம் ஆலோசனை செய்து வந்தார்கள். மேலும் சாட்சி கூறினார்கள். அவரின் ஆலோசனை மிகவும் பயனுள்ளதாக இருந்தது. மேலும் சீன மவ்லவி சாஹிபின் துஆவினால் எங்களின் பெரும் பெரும் கஷ்டங்கள் எளிதாகி விடுகின்றன என்றும் கூறி வந்தனர். சுருக்கம் என்னவென்றால், கராச்சியின் மிகவும் பிரபல்யமான சீன மவ்லவி சாஹிப் எந்த மார்க்க வித்தியாசமுமின்றி அனைவருக்கும் பயனளிக்கும் நபராகவும் எல்லையற்ற அன்பை வழங்க கூடியவராகவும் இருந்தார்கள். இங்கிலாந்து செல்லும் வரை நீண்ட காலம் அவரை பற்றிய பேச்சு அஹ்மதி அல்லாதவர்களிடம் இருந்து வந்தது.

சீனர் சாஹிப் தனது தாய்க்கு மிகவும் தொண்டாற்றி வந்தார். சில முறை அன்னாரின் தாய் கோபத்தில் அன்னாரை கடிந்து கொள்வார். ஆனால் அன்னார் எப்போதும் தாயை அணைத்து அன்பு செலுத்துவார்கள். அவர்களின் தேவையைக் கருத்தில் கொள்வார்கள். அக்கம் பக்கத்தில் யார் என்ன பார்க்கின்றார்? என்பதை எல்லாம் பற்றி அவர் கவலைப்படமாட்டார். தாயிடம் எல்லையற்ற அன்பு கொண்டிருந்தார்.

கிர்கிஸ்தான் ஜமாஅத்தைச் சார்ந்த மஜானோஃப் முஹம்மது சாஹிப் எழுதுகின்றார்: உஸ்மான் சூ சுங் ஷீ சாஹிபை நான் 1996 –ல் ஒரு விமான பயணத்தின்போது சந்தித்தேன். துவக்கத்தில் அன்னாரை முஸ்லிம் என்றோ அல்லது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஆலிம் என்றோ என்னால் உணர்ந்து கொள்ள முடியவில்லை. ஆனால், பயணத்தில் அமர்ந்து விமானம் கிளம்பும்போது அன்னார் பிஸ்மில்லாஹ் ஓதினார்கள். அப்போது அன்னார் முஸ்லிம் ஆவார் என்பது எனக்கு தெரிய வந்தது. அதன் பிறகு நான் அன்னாருக்கு ஸலாம் கூறி அறிமுகமாகிக் கொண்டோம். பல்வேறு விஷயங்களைப் பற்றி பேசத் தொடங்கினோம். அன்னார் என்னிடம் உங்களுக்கு அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தை பற்றி தெரியுமா? எனக் கேட்டார்கள். நான் இல்லை எனக் கூறினேன். அதன் பிறகு நீங்கள் திருக்குர்ஆனின் சீன மொழியாக்கத்தைப் படித்தீர்களா? எனக் கேட்டார்கள். அதற்கு ஆம்; நான் படிக்கிறேன் எனக் கூறினேன். சீன மொழியில் எத்தனை திருக்குர்ஆன் மொழியாக்கம் உள்ளது? எனக் கேட்டார்கள். நான், தற்போது எத்தனை மொழியாக்கங்கள் உள்ளனவோ அதனை நான் படித்து வருகின்றேன் என்று கூறினேன். உஸ்மான் சாஹிப், சீன மொழியில் மொழியாக்கம் செய்த அனைவரையும் உங்களுக்கு தெரியுமா? எனக் கேட்டார். அதற்கு நான் ஆம்; எனக்கு எல்லாரையும் தெரியும் எனக் கூறினேன். அந்த மொழிபெயர்ப்பாளர்களில் ஒருவரின் பெயர் உஸ்மான் சூல் ஆகும். அவரை உங்களுக்கு தெரியுமா? எனக் கேட்டேன். ஆம்; நான் அவரை அறிவேன். ஆனால் அன்னாரின் மொழியாக்கத்தைப் படித்ததில்லை. அன்னாரை சந்தித்ததும் இல்லை எனக் கூறினேன். அதற்கு அன்னார், பின்னர் உஸ்மான் சூல் சாஹிபை எப்படி அறிவீர்கள் எனக் கேட்டேன்? அதற்கு நான் அவர் ஆலிம் ஆவார். அன்னார் சீன மொழியில் திருக்குர்ஆன் மொழிபெயர்ப்பு செய்துள்ளார் என்பது மட்டும் தெரியும். ஆனால் அன்னாரை நான் ஒருபோதும் பார்த்ததில்லை. அப்போது அன்னார், நான்தான் உஸ்மான் சூல் என்று கூறினார்கள். எனக்கு நம்பிக்கையே வரவில்லை. அன்னாரை தொடர்பு கொள்ளும் விவரங்களைத் தந்தார்கள். பின்னர் நானும் எனது நம்பரை அவருக்கு கொடுத்தேன். ஓரிரு நாட்களுக்குப் பிறகு அன்னார் எனக்கு போன் செய்தார்கள். நான் உங்கள் வீட்டிற்கு வந்து உங்களைச் சந்திக்க விரும்புகிறேன் எனக் கூறினார்கள். இவ்வளவு பெரிய ஆலிம் எனது வீட்டிற்கு வருவதை என்னால் கற்பனை கூட செய்து பார்க்க முடியவில்லை. நான் எனது வீட்டில் அன்னாரை வரவேற்றேன். அன்னாருடன் இரண்டு பாகிஸ்தானிய நண்பர்களும் இருந்தனர். பத்து நிமிடங்கள் வரை பேசிக் கொண்டிருந்தோம். அதன் பிறகு உஸ்மான் சூல் சாஹிப் என்னை ஒரு ரெஸ்டாரெண்டிற்கு அழைத்துச் சென்றார்கள். நான் அன்னாரிடம் கூறினேன். நீங்கள் எனது விருந்தினர். நான்தான் உங்களுக்கு விருந்து கொடுக்க வேண்டும் என்று கூறினேன். அதற்கு அன்னார் நீங்கள் மாணவர் ஆவீர்கள். நான் உங்களை விடப் பெரியவன். உங்களின் பெற்றோரின் இடத்தில் உள்ளேன். எனவே, உங்களுக்கு நான் உதவி செய்ய வேண்டும் எனக் கூறினார்கள். அதன் பிறகு ரெஸ்டாரெண்ட் சென்று உணவு உண்டோம். பல்வேறு விஷயங்களைப் பற்றி பேசினோம்.

இவ்வாறு ஒருநாள் நான் அன்னாரைச் சந்திக்க சென்றேன். அவருடைய வீட்டில் அமர்ந்து பேசினோம். ஈஸா நபி மரணம், கத்மே நுபுவ்வத், யாஜூஜ் மாஜூஜ், ஜின், இமாம் மஹ்தி வருகை போன்ற விஷயங்களைப் பற்றி என்னிடம் கேட்டார்கள். அதற்கு நான் பொதுவான முஸ்லிம்களின் கருத்தை பிரதிபலிக்கும் வகையில் நான் பதிலளித்தேன். உஸ்மான் சூல் சாஹிப் சிரித்தார்கள். பின்னர் அந்த கேள்விகளுக்குரிய சரியான பதிலை அன்னார் எனக்கு விளக்கினார்கள். எனக்கு அவரது பதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. திருக்குர்ஆன் சீன மொழியாக்கமும் வேறு சில புத்தகங்களும் அன்பளிப்பாக வழங்கினார்கள். இதனை கண்டிப்பாக படியுங்கள். படித்த பிறகு நீங்கள் என்ன உணர்ந்தீர்கள் என எனக்கு கண்டிப்பாக எழுத வேண்டும் என என்னிடம் கூறினார்கள். நானும் அந்த புத்தகங்களை படித்தேன். படித்த பிறகு எனது சிந்தனையே முற்றிலும் மாறி விட்டது. அப்போது எனக்கு பைஅத்தைப் பற்றி எதுவும் தெரியாது. பிறகு நான் பைஅத்தும் செய்து விட்டேன். எனக்கு இமாம் மஹ்தியின் வருகையைப் பற்றியும் அன்னாரின் உண்மையான ஜமாஅத்தை பற்றியும் தெரிய வந்துள்ளது என்பதை அறிந்து எனக்கு பெருமிதமாக உள்ளது.

அன்னாரின் துஆ ஒப்புக் கொள்ளப்பட்ட சம்பவங்களை மக்கள் எழுதியுள்ளனர். மன்ஸூர் ஷாது சாஹிப் கூறுகின்றார்: ஒருமுறை இரயிலில் ரப்வாவிலிருந்து கராச்சிக்கு நாங்கள் பயணம் செய்து கொண்டிருந்தோம். ரப்வாவில் அத்ஃபாலின் நிகழ்ச்சி ஒன்று இருந்தது. 60 அத்ஃபால் இருந்தனர். பயணத்தில் ஜமாஅத்தாக தொழுகையை நிறைவேற்றினோம். இவர்கள் அஹ்மதிகள் என்பது அஹ்மதி அல்லாதவர்களுக்கு தெரிய வந்தது. ஆனால், மவ்லவிகள் இரயில் பெட்டியில் இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என சொற்பொழிவாற்றினர். நாங்கள் மிகவும் கவலைக்குள்ளானோம். உஸ்மான் சீனர் சாஹிபும் எங்களுடன் இருந்தார். அனைத்தையும் கருத்தில் கொண்டு டியூட்டி போடப்பட்டது. எனக்கும் டியூட்டி கொடுங்கள் என்று சீனர் சாஹிப் கூறினார்கள். பிறகு மேலே பெர்த்தில் சென்று அமர்ந்து கொள்ளுங்கள். துஆ செய்யுங்கள் என்று அன்னாரிடம் நான் கூறினேன். முல்தான் என்ற ஊரை அடைந்ததும் எங்களுக்கெதிராக நடவடிக்கை எடுத்து எங்களை அடித்து உதைக்க வேண்டும் என்று திட்டம் தீட்டியிருந்தனர். ஆனால் முல்தான் ஊரை வண்டி கடந்து சென்றது. மவ்லவியிடம் இருந்து எந்த சத்தமும் வரவில்லை. நான் சென்று பார்த்தபோது மவ்லவி பெட்டியில் தூங்கிக் கொண்டிருந்தார். மவ்லவி சாஹிப் முல்தானில் இறங்க வேண்டும். ஆனால் முல்தான் கடந்து சென்றதும் கூட தெரியாமல் தூங்கிக் கொண்டிருந்தார். அடுத்த ஸ்டேஷனில் சென்று இறங்கினார். இவ்வாறு நாங்கள் உயிர் பிழைத்தோம்.

அதேபோன்று அத்னான் ஸஃபர் சாஹிப் கூறுகின்றார்: எனது பணி Home Office –ல் தடைபட்டிருந்தது. பாஸ்போர்ட் கேட்டதற்கு உங்களது பெயரில் எந்த பதிவும் எங்களிடம் இல்லை எனக் கூறப்பட்டது. மூன்று நான்கு மாதங்களாக வேலையிலிருந்து பல நாட்கள் விடுப்பு எடுத்துச் சென்று வந்து கொண்டிருந்–தேன். இறுதியில் ஒருநாள் நான் நம்பிக்கை இழந்து விட்டேன். இஸ்லாமாபாத்தில் ஒருநாள் உஸ்மான் சீனர் சாஹிபைச் சந்தித்தேன். தொழுது விட்டு வீட்டிற்குச் சென்று கொண்டிருந்தார்கள். நான் எனது பாஸ்போர்ட் தொடர்பான பிரச்சனையைக் கூறினேன். அன்னார் துஆ செய்வோம் எனக் கூறி அங்கேயே நின்று துஆ செய்தார்கள். அழுது மன்றாடி துஆ செய்தார்கள். நான் பயந்து விட்டேன். நான் தேவையில்லைமல்

அன்னாரை தொந்தரவு செய்து விட்டேனே என வருந்தினேன். வேறு சிலரும் துஆவில் கலந்து கொண்டனர். அடுத்த நாள் எனது வக்கீல் அலுவலகத்திற்கு போன் செய்தார். ஆனால் எவரும் Call –ஐ எடுக்கவில்லை. நீண்ட நேரம் ரிங்க் ஆனதால் அந்த வழியாக சென்ற உயர் அதிகாரி போனை எடுத்தார். அவரிடம் விஷயம் விரிவாக கூறப்பட்டது. அடுத்த நாள் காலை நேரில் வந்து சந்தித்து விட்டு செல்லுங்கள் எனக் கூறினார். நான் அலுவலகம் சென்றேன். அந்த அதிகாரி பெயர் ரிச்சர்டு ஆகும். வரவேற்பறையில் நான் மிஸ்டர் ரிச்சர்டை சந்திக்க வேண்டும் எனக் கூறினேன். அதற்கு அவர்கள் அவர் பெரிய அதிகாரி; அவர் உங்களை எப்படி சந்திப்பார்? எங்களிடம் விஷயத்தை கூறுங்கள் எனக் கூறினார்கள். அதற்கு நான் இல்லை; அவர்தான் என்னை அழைத்துள்ளார் எனக் கூறினேன். உயர் அதிகாரிக்கு தகவல் கொடுக்க எவரும் முன் வரவில்லை. கடைசியில் ஒருவர் தகவல் கொடுக்க முன் வந்தார். பின்னர் மிஸ்டர் ரிச்சர்டு தனது அலுவலகத்திலிருந்து தானே எழுந்து வந்து என்னை அழைத்துச் சென்றார். அனைத்து பதிவுகளையும் ஆய்வு செய்தார். தனது செயலர்களையும் அழைத்தார். பின்னர் இவருக்கு பாஸ்போர்ட் வழங்குவோம் என கடிதம் கொடுத்து விட்டார். அதன் பிறகு என்னை வழி அனுப்பி வைக்க வெளியில் வந்தார். இதனை எல்லா ஊழியர்களும் பார்த்துக் கொண்டிருந்தனர். இத்தனை பெரிய மனிதர் யார் வந்து விட்டார்? அவரை வழி அனுப்ப உயர் அதிகாரியே எழுந்து வந்துள்ளார் என ஆச்சரியத்துடன் பார்த்தனர். நான் அவர்களுக்கு என்ன கூற முடியும்? அது உஸ்மான் சீனர் சாஹிபின் உருக்கம் நிறைந்த துஆவின் விளைவாகும். நான்கு மாதங்களாக தடைபட்டிருந்த பணி ஒரே நாளில் நடந்து முடிந்தது. மாறாக உயர் அதிகாரியின் கைகளினால் நடைபெற்றது. ஏராளமான சம்பவங்கள் உள்ளன. நான் கூறியது போன்று அனைத்தையும் எடுத்துரைக்க முடியாது. அன்னாருக்கு மிக நெருக்கமான சிலர் உள்ளனர். அவர்கள் கூறியதை கூறி விடுகிறேன்.

செய்யத் முஹம்மது ஹுஸைன் சாஹிப் முரப்பி கூறுகின்றார்கள்: வாரம் வாரம் கூட்டம் நடந்து வந்தது. முரப்பிமார்களாகிய நாங்கள் பஸ்ஸில் அமர்ந்து சென்று விடுவோம். எங்களிடம் அப்போது வண்டி ஏதும் கிடையாது. இரவு நீண்ட நேரம் வரை கூட்டம் நடக்கும். அதன் பிறகு முரப்பிமார்கள் மஜ்லிஸே ஆமிலா உறுப்பினர் –களுடன் அவர்களின் வண்டிக்காக காத்திருந்து அதில் அமர்ந்து சென்று விடுவார்கள்.

ஆனால் உஸ்மான் சீனர் சாஹிப் வண்டிக்கு காத்திருந்ததே கிடையாது. நடந்தே சென்று விடுவார்கள் அல்லது வழிப் பாதையில் வண்டி ஏதாவது ஏற்பாடாகி விடும் அல்லது எவராவது சுயம் அவர்களை வண்டியில் அமர்த்தி அழைத்துச் சென்று விடுவார்கள். அன்னார் ஒரு பகுதியில் மிஷன் ஹவுஸில் தங்கியிருந்தார்கள். அன்னார் ஒரு முறை விருந்திற்கு அழைத்தார்கள். நீங்கள் எங்கே தங்கியுள்ளீர்கள்? எனக் கேட்டேன். நான் பெண்கள் தொழுகின்ற இந்த இடத்தில் ஹாலில் தான் தங்கியுள்ளேன். பெண்கள் தொழ வரும் போது எனது பொருட்களை அகற்றி விடுவேன் எனக் கூறினார்கள். அதன் பிறகு எனது தூங்கும் இடமும் உணவு உண்ணும் இடமும் அதுவாகவே இருக்கும் எனக் கூறினார்கள். மிகப் பணிவுடனும் எளிமையுடனும் சிறிய இடத்தில் தங்கினார்கள்.

குர்ஷித் அர்ஷத் சாஹிப் நீண்ட காலம் அன்னாருடன் பணியாற்றியுள்ளார். அன்னார் கூறுகின்றார்: நான் 33 வருடங்கள் அன்னாருடன் இணைந்து பணியாற்றினேன். தொழுகைகளை ஜமாஅத்துடன் தொழுவதைப் பேணி வந்தார்கள். இறை வணக்கத்தில் ஆர்வத்துடன் இருந்தார்கள். அது எங்களுக்கான முன்னுதாரணமாகும். மழை, பனிப்பொழிவு, சூறாவளி எதுவாக இருக்கட்டும். எப்படிப்பட்ட நிலைமை இருந்தாலும் அன்னார் ஜமாஅத்தாக தொழுவதற்கு பள்ளிவாயிலுக்கு வந்து விடுவார்கள். முதுமையின் காரணமாக மிகவும் பலவீனமானவராக இருந்தார்கள். ஏற்கனவே கூறப்பட்டது போன்று வீட்டிலிருந்து பள்ளிவாயிலுக்குச் செல்ல 10 நிமிடங்களே ஆகும். ஆயினும் 15, 20 நிமிடங்கள் கஷ்டப்பட்டு மூச்சு வாங்கி பள்ளிவாயிலுக்கு வந்து செல்வார்கள். தஹஜ்ஜுத் தொடர்ந்து தொழுது வந்தார்கள். நாங்கள் நீண்ட தூரம் பயணம் செய்து சீனாவின் ஒரு பகுதிக்கு சென்றோம். அஹ்மதிகளிடம் இரவு நீண்ட நேரம் வரை பேசிக் கொண்டிருந்தோம். எனவே அதிகாலையில் தஹஜ்ஜுத் தொழுவதற்கு எழுவது கடினம் என நான் எண்ணினேன். ஆனால் நான் கண் விழித்து பார்த்தபோது உஸ்மான் சீனர் சாஹிப் தஹஜ்ஜுத் தொழுது கொண்டு இருந்தார்கள். சுருக்கமாக தொழுதாலும் தொழுகையை விட்டு விடவில்லை. சீனாவிலிருந்து ரப்வா வந்தவுடன் ரப்வாவின் சான்றோர்கள் மிகவும் உருக்கத்துடனும், வேதனையுடனும் தொழுது வந்ததையும், நோன்பு நோற்பதையும், துஆக்கள் செய்வதையும் அன்னார் கண்டார்கள். அவர்களின் துஆக்களை அல்லாஹ் ஏற்றுக் கொள்வதையும் கண்டார்கள். இது அன்னாரின் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. நானும் இந்த சான்றோர்களின் அடிச்சுவட்டில் வழி நடப்பேன் என அன்னார் உறுதி பூண்டார்கள். அப்போது அன்னாருக்கு இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் வழிகாட்டல்களும் கிடைத்திருந்தன. ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் மிர்ஸா ஷரீஃப் அஹ்மத் (ரலி) அவர்கள் போன்ற சான்றோர்களின் நட்பும் கிடைத்திருந்தது. மவ்லவி குலாம் ரஸூல் சாஹிப் ராஜிக்கி சாஹிப், ஹஸ்ரத் முக்தார் அஹ்மத் சாஹிப் ஷாஜஹான்பூரி, ஹஸ்ரத் முஹம்மது இப்ராஹீம் சாஹிப் பகாபூரி போன்ற சான்றோர் –களின் நட்பிலிருந்தும் உஸ்மான் சீனர் சாஹிப் பயன் பெற்றார்கள். அல்லாஹ் இந்த சான்றோரி –களின் தோழமையின் காரணமாக அன்னாரின் சிறப்புகளை மேலும் அதிகரித்தான். அல்லாஹ்வுடன் மேலும் அதிகமான தொடர்பு ஏற்பட்டது.

அன்னார் கூறுகின்றார்: தப்லீகிலும் மிகத் துடிப்புடன் அன்னார் செயல்பட்டார்கள். மிகவும் அமைதியான சுபாவம் படைத்தவர். குறைவாகவே பேசக் கூடியவர். ஆனால் தப்லீக் நடக்கும்போது அன்னாரிடத்தில் அசாதாரண ஆற்றல் பிறந்து விடுவதை நாங்கள் கண்டுள்ளோம். பல மணி நேரம் பேசுவார்கள். பலமுறை போனிலும் பல மணி நேரம் நீண்ட கலந்துரையாடலும் நடக்கும். விருந்தோம்பல் அன்னாருக்கு பாரம்பரிய சொத்தாக கிடைத்திருந்தது. எனது தந்தை மிகவும் விருந்தோம்பல் செய்யக் கூடியவர், எங்களது கிராமத்தில் ஹோட்டல் எதுவும் கிடையாது. எனவே எங்கள் வீடே ஹோட்டல் ஆகி விடும் என்று எங்களிடம் அன்னார் அடிக்கடி கூறுவார்கள். விருந்தோம்பல் செய்வதில் உஸ்மான் சீனர் சாஹிபின் மனைவியும் அன்னாருக்கு முழு ஒத்துழைப்பு வழங்கி வந்தார்கள். அதேபோன்று அனைவரது உணர்வுகளையும் கருத்தில் கொண்டவராக அன்னார் திகழ்ந்தார்கள். ஒருமுறை இரவு நீண்ட நேரம் கூட்டம் நடந்து வந்தது. காரில் அமரும் போது எனது வீடு அருகில்தான் உள்ளது. அங்கு நாம் செல்வோம் எனக் கூறினார்.

ரஷீத் சாஹிப் கூறுகின்றார்கள்: அன்னார் அந்த அழைப்பை நிராகரித்து விடுவார்கள் என நாங்கள் எண்ணினோம். ஆனால் அன்னார் அவரது வீட்டிற்குச் சென்றார்கள். விருந்திற்கான ஏற்பாட்டையும் அந்த நபர் செய்தார். மிக நீண்ட நேரம் அங்கு தங்கினார்கள். இரவு மிக நீண்ட நேரம் கழித்து 1.00 மணியளவில் வீட்டிற்கு வந்தடைந்தோம். ஆனால் அதனை நிராகரிக்கவோ அல்லது சீக்கிரம் ஆகட்டும். நான் விரைந்து செல்ல வேண்டியது உள்ளது என்றோ அன்னார் கூறவில்லை.

அதேபோன்று நஸீர் அஹ்மது பத்ர் சாஹிப் எழுதுகின்றார்: சீன மொழி தொடர்பாக எனக்கு ஒரு கட்டளை வந்தது. அதன் பிறகு அன்னாருடன் தொடர்பு ஏற்பட்டது. சீனாவின் ஏராளமான இடங்களுக்குச் சென்று இறைவன் பால் மக்களை அழைக்கும் பாக்கியம் கிடைத்தது. இதில் உஸ்மான் சூல் சாஹிபின் மிக கண்ணியத்திற்குரிய மிக அழகிய கருத்து மற்றும் ஆலோசனைக்கு ஏற்ப நான் மிகவும் நன்கு பயனடைந்துள்ளேன். எனக்கு அன்னார் வழிகாட்டி வந்தார்கள். ஆயிரக்கணக்கான சீனர்களுக்கு ஜமாஅத் புத்தகங்கள் மற்றும் Folders வடிவில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் தூதுச் செய்தியை எட்ட வைக்கும் பாக்கியம் எனக்கு கிடைத்தது. ஏறக்குறைய எல்லா இடங்களிலும் சீனர் சாஹிபின் நற்குறிப்பு அழகிய முறையில் கூறப்பட்டது. சீனாவில் ஒரு பெரும் இஸ்லாமிய அறிஞராக அவர் பார்க்கப்படுகிறார்.

சீன மொழியில் தனது நினைவாக அன்னார் விட்டுச் சென்றுள்ள புத்தகங்கள் அன்னாரை ஒருபோதும் மரணிக்க விடாது. அன்னாரின் பேனாவின் மூலம் வெளிப்பட்ட இருபதிற்கும் மேற்பட்ட நூல்கள் தற்போது மொழியாக்கத் –திற்கான கடலாக உள்ளது. அந்த ஞானத்தை அன்னார் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஆன்மீக கருவூலங்களிலிருந்து பெற்றார்கள். மேலும் அதனை மொழியாக்கம் செய்து மக்கள் வரை சென்றடையச் செய்தார்கள். அன்னாரின் தூய தரம் வாய்ந்த சீன மொழி கூட கேட்பவரின் உள்ளத்தில் சிறந்த தாக்கத்தையும், உணர்வையும் ஏற்படுத்தியது.

எனக்கு இதைப் பற்றிய அறிவு சீனாவில் ஒரு முஸ்லிம் மத்ரஸாவிற்கு சென்றபோது கிடைத்தது. முதன் முறை சென்றபோது அவர்கள் எந்த எதிர் நடவடிக்கையையும் காட்டவில்லை. ஆனால் சிறிது காலம் கழித்து அங்கு சென்றேன். அப்போது அனைத்து சீன முஸ்லிம்களும், இமாமும் மிகக் கண்ணியத்துடன் நடந்து கொண்டனர். அவரிடத்தில் நான் கேட்டேன். நான் முதன் முறை வந்தபோது நீங்கள் ஆர்வம் காட்டவில்லை. ஆனால் தற்போது கூடுதல் ஆர்வம் வெளிப்படுகிறதே என்று கேட்டேன். அதற்கு சீன நண்பர் ஒருவர் கூறினார். நீங்கள் சீன மொழியாக்க புத்தகங்களை மவ்லவி சாஹிப் வசம் கொடுத்துச் சென்றீர்கள். அதிலும் குறிப்பாக வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூல்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கூற்றுகளை இமாம் சாஹிப் குத்பாவில் படித்துக் காட்டுவது உண்டு. அதனால் எங்களிடத்தில் புத்துணர்வு ஏற்படுகிறது. இதுபோன்ற அழகிய கூற்றுகளை எங்களது முழு வாழ்நாளிலும் கேட்டதில்லை. எனவே இதுபோன்ற மேலும் பல புத்தகங்களை நீங்கள் எங்களுக்கு கொண்டு வந்து தாருங்கள் எனக் கூறினர்.

சீனர் சாஹிபின் சொந்த ஊருக்கு செல்லும் சந்தர்ப்பமும் எனக்கு கிடைத்தது. அன்னாருடைய உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் உஸ்மான் சூல் சாஹிபை மிக கண்ணித்துடன் நினைவு கூறி வந்தார்கள். அன்னாரை தமது உறவினர் என்று கூறி மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள். நான் அங்கிருந்த நேரம் வரை எல்லாரும் என்னை கருத்தில் கொண்டனர். விருந்து உபசரிப்பு செய்தனர். நான் உஸ்மான் சாஹிபை அறிவேன் என்ற காரணத்தாலும் நான் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பிரதிநிதி என்ற அடிப்படையிலும் எனக்கு இவ்வளவு கண்ணியம் கிடைத்தது.

அவர்கள் கூறுகின்றார்கள்: உஸ்மான் சூல் சாஹிப் சீன மொழியில் திருக்குர்ஆன் மொழியாக்கம் செய்துள்ளார்கள். அது மிகவும் சாதாரண மக்களுக்கும் புரியும் வகையில் மிக எளிமையானதாகும். அதில் சீன மொழியின் புலமையும் தரமும் இருக்கின்றது. சீன மொழியில் ஏற்கெனவே திருக்குர்ஆன் மொழியாக்கம் இருந்த போதிலும் உஸ்மான் சூல் சாஹிபின் மொழி முழு சீனாவிலும் அனைத்து தரப்பு மக்களாலும் ஒன்றுபட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டதாக உள்ளது. இதனை பல சீன ஆலிம்களை சந்தித்த பிறகு நான் புரிந்து கொண்டேன். அவர்கள் ஜமாஅத்தின் கொள்கைகளில் மிகவும் விருப்பத்துடன் ஒன்றுபட்டு ஏற்றுக் கொள்கின்றனர். மேலும் அதன் மூலம் திருக்குர்ஆனை புரிந்து கொள்ள அதிக ஆர்வம் கொண்டுள்ளனர்.

நான் அந்த பகுதியை சுற்றுப் பயணம் செய்து கொண்டிருந்தபோது அந்த பகுதியின் இமாமாக இருந்த முதியவர் ஒருவர் எனது கரங்களில் அந்த மொழியாக்கம் இருப்பதைக் கண்டதும் அவர் கண்களில் ஒளி பிறந்தது. அதனை பார்த்து மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். நான் இந்த மொழியாக்கத்தை நீண்ட காலமாக தேடி வந்தேன். இதை எனக்கு தருவீர்களா? எனக் கேட்டார். அதற்கு நான் தற்போது என்னிடம் இந்த ஒரேயொரு பிரதிதான் உள்ளது. நீங்கள் உங்களது முகவரியைக் கூறுங்கள். நாங்கள் உங்களுக்கு அனுப்பித் தருகிறோம் என்று கூறினேன். சிறிது நேரம் யோசித்த பிறகு கூறினார்: நீங்கள் சிறிது நேரம் இந்தக் குர்ஆனை கடனாக கொடுங்கள். நான் அதனை புகைப்பட நகல் எடுத்து வருகின்றேன் என்றார். சுமார் 1430 பக்கங்களை புகைப்பட நகல் எடுக்கும் அவரது ஆர்வத்தை பார்த்து நான் அவருக்கு அந்த குர்ஆனை கொடுத்து விட்டேன். மேலும் அவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள். மீண்டும் மீண்டும் நன்றி கூறினார்கள். அவருக்கு ஏதோ மாபெரும் கருவூலம் கிடைத்தது போன்று உணர்ந்தார். உண்மையில் அது கருவூலம்தான். மகிழ்ச்சியை அவரால் கட்டுப்படுத்த முடியவில்லை. அதே போன்று அவரது தொடர்புகள் மிகவும் அதிகமாகும்.

மேலும் பல முரப்பிகள் எழுதியுள்ளனர். நாங்கள் செல்லும் இடமெல்லாம் எல்லா இடத்திலும் சீனர் சாஹிபை பற்றி மக்கள் பேசுவதுண்டு. ஸஃபருல்லாஹ் சாஹிப் முரப்பி அவர்களும் சீனாவில் இருந்துள்ளார். தற்போது பாகிஸ்தானில் உள்ளார். அவர் கூறுகின்றார்: 2004 –ல் சீனர் சாஹிப் பாகிஸ்தான் சென்றார். இஸ்லாமாபாத்திலிருந்து ரப்வா பயணத்தின்போது எனக்கு ஓர் இடத்தைக் காட்டித் தந்தார்கள். அன்னார் அங்கு சென்று தனிமையில் இறைவணக்கம் செய்து வந்தார்கள்.

மேலும் அன்னாரின் துஆ ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு சம்பவத்தையும் கூறுகின்றார்: அன்னார் ஒரு வீட்டிற்கு சென்றிருந்தார்கள். திருமணம் ஆகி 10 வருடங்கள் கழிந்தும் அவர்களுக்கு குழந்தை பிறக்கமால் இருந்தது. சீனர் சாஹிபிடம் துஆவிற்காக கூறப்பட்டது. சீனர் சாஹிப் துஆ செய்தார்கள். கனவில் பார்த்தார்கள். அவர்களின் வீட்டு வாசலில் சவுத்ரி ஸஃபருல்லாஹ் கான் சாஹிப் கட்டிலில் தூங்குகின்றார்கள். தனது கனவை அவர்களிடம், உங்களுக்கு மகன் பிறப்பான் என எனக்கு அல்லாஹ் நற்செய்தி வழங்கியுள்ளான் எனவும் கூறினார்கள். அந்த வகையில் சிறிது காலம் கழித்து அந்த தம்பதியருக்கு அல்லாஹ் ஆண் குழந்தையை வழங்கினான். எனக்கும் நினைவு உள்ளது. ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபா காலத்தில் நாங்கள் சிறுவர்களாக இருந்தோம். அன்னார் தனிமையில் இறைவணக்கம் செய்த இடத்திற்கு நானும் சிறு வயதில் சென்றுள்ளேன். ஒரு சிறிய அறையில் அமர்ந்திருந்தார்கள். திருக்குர்ஆன் கையில் இருந்தது. துஆ செய்து கொண்டிருந்தார்கள். பெரியவர்களும் சிறியவர்களும் அன்னாரிடத்தில் துஆவிற்காக கூறினோம். மேலும் மிகவும் சிரித்தபடி பதில் தந்தார்கள். மிகவும் பரிவுடன் நடந்து கொண்டார்கள்.

டாக்டர் நூர் சாஹிப் கூறுகின்றார்கள்: அன்னாரை பரிசோதித்த பிறகு 2004 –ல் 14,15 ஆண்டுகளுக்கு முன்னர் அன்னாருக்கு இருதய நோய் இருப்பது தெரிய வந்தது. அதற்கு எந்த சிகிச்சையும் கிடையாது. எனவே எனக்கு மிகவும் வேதனை ஏற்பட்டது. ஏனெனில் துஆ மற்றும் சாதாரண சில மருந்துகளை தவிர்த்து வேறெந்த வழிமுறையும் இல்லாமல் இருந்தது. ஆனால் அதுபோன்ற மக்கள் ஒரு சில ஆண்டுகளை கடப்பதே கடினமாகும். அல்லாஹ்வின் அருளால் நான் ஆச்சரியப்படுகிறேன். அன்னாரை பல முறை சந்தித்தேன். பலவீனம் என்பது இருக்கவே செய்தது. ஆயினும் அன்னார் தனது நோயை தனது பணிகளுக்கு இடையூறாக ஆக்கிக் கொள்ளவில்லை. மேலும் பணியை தொடர்ந்து செய்து கொண்டு சென்றார். நோயின் காரணமாக பணி செய்யாமலோ அல்லது இறை வணக்கம் செய்யமலோ அன்னார் இருந்ததில்லை.

மாறாக ஒருவர் எனக்கு எழுதியுள்ளார்: பனிப்பொழிவு தீவிரமாக இருந்தது. எனவே பள்ளிவாயிலுக்கு எவருமே வரமாட்டார்கள் என நினைத்தோம். சீனர் சாஹிபும் வருவது கஷ்டமே என எண்ணினோம். ஆனால் நாங்கள் வெளியேறி பார்த்தோம். சீனர் சாஹிபின் காலடி பதிந்த தடங்கள் அங்கே இருந்தன. நாங்கள் உள்ளே சென்று பார்த்த பிறகு சீனர் சாஹிப் பள்ளிவாயிலுக்கு வந்தது மட்டுமல்ல; முன்பாகவே பள்ளிவாயிலுக்கு வருகை தந்து தஹஜ்ஜுத் தொழுது கொண்டிருந்தார்கள்.

அதாவுல் முஜீப் ராஷித் சாஹிப் அன்னாரை பற்றி சுருக்கமாக எழுதியுள்ளார்கள். அது நல்ல சுருக்கமாகும். உண்மையும் அதுதான். அன்னார் கூறுகின்றார்கள்: அன்னாரின் மறைவால் பெரிய வெற்றிடம் ஏற்பட்டுள்ளது. ஜமாஅத்தின் மிகவும் உயர்ந்த சான்றோர் ஆவார். நான் சீனர் சாஹிபின் சிறப்புகளை சிந்தித்து கொண்டிருந்தேன். அவர்களைப் பற்றி எனது எண்ணத்தில் வந்தது இவையாகும். அதிகமாக துஆ செய்யக் கூடிய நபர்; தொழுகைகளை மிகவும் பேணியவர்; பலவீனம் மற்றும் நோய்வாய்ப்பட்ட நிலையிலும் பள்ளிவாயிலுக்குச் செல்லக்கூடியவர்; மிகவும் நல்லவர்; இறையடியார்; எவருக்கும் தீங்கிழைக்காத மனிதர்; எல்லாருக்கும் நன்மையை விரும்பக் கூடியவர்; பிறருக்கு நல்ல ஆலோசனைகளை வழங்குபவர்; மிகவும் எளிய மனிதர்; மிகவும் தைரியசாலி; பலவீனம் இருந்த போதிலும் சுறுசுறுப்பாக செயல்பட்டவர்; மார்க்கத் தொண்டில் எப்போதும் மும்முரமாக இருந்தவர்; தனது கடமைகளை மிகவும் கலப்பற்ற மனப்பான்மை மற்றும் உழைப்புடனும் பொறுப்புடனும் ஆற்றியவர்; மார்க்கத் தொண்டு செய்து கொண்டே செல்வதற்கு ஒரு துடிப்பு இருந்தது. அஹ்மதிய்யா கிலாஃபத்தின் உண்மையான தொண்டர் ஆவார். எப்போதும் புன்சிரிப்புடன் பிறரிடம் பழகுபவர்.

இன்னும் அன்னாரின் ஏராளமான சிறப்புகள் உள்ளன. இவர்கள் கூறியது உண்மையாகும். அல்லாஹ் மதிப்பிற்குரிய உஸ்மான் சீனர் சாஹிபின் அந்தஸ்தை உயர்த்திக் கொண்டே செல்வானாக. மேலும் அன்னாரின் மனைவிக்கும் பொறுமை மற்றும் தைரியத்தை வழங்குவானாக. மேலும் அவர்களுக்கு அல்லாஹ் பாதுகாவலனாகவும் போதுமானவனகாவும் இருப்பானாக. அதே போன்று அன்னாரின் பிள்ளைகளை அன்னாரின் துஆக்கள் மற்றும் நன்மைகளுக்கு வாரிசாக்குவானாக. அன்னாரின் பிள்ளைகள் அன்னாரின் அடிச்சுவட்டில் நடப்பவர்களாக இருக்கட்டுமாக. நான் ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு அன்னாரின் ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பேன்.

★ ★ ★ ★ ★

# ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத் -தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் 2017 ஏப்ரல் மாதம் ஜெர்மனியில் மேற்கொண்ட சுற்றுப் பயணத்தின்போது 23 ஏப்ரல் 2017 -ல் வாகிஃபாத்தே நவ் - ஜமாஅத்திற்காக தம்மை வக்ஃப் செய்துள்ள இளம்பெண்களுடன் நடைபெற்ற கேள்வி-பதில் நிகழ்ச்சி

(அறிக்கை : அப்துல் மாஜித் தாஹிர், கூடுதல் வக்கீலுத் த.்.ப்ஸீர், இலண்டன்)

**வாகிஃபாத்தே நவ் – ஜமாஅத்திற்காக தம்மை வக்.்.ப் செய்துள்ள இளம் பெண்களுடன் ஹுஸூர் அவர்களின் வகுப்பு:**

ஒரு வக்.்.பே நவ் பெண், ஹுஸூர் அவர்களிடம் மூன்றாவது உலகப் போர் தொடர்பாக ஒரு கேள்வி கேட்டார். அதாவது, மூன்றாவது உலகப் போருக்குப் பிறகு எல்லாமே அழிந்து விடும் என்று கூறப்படுவது சரியா? என்பது கேள்வியாகும். இரண்டாவது கேள்வி, அந்நிலையில் ஒரு ஜமாஅத் இன்னொரு ஜமாஅத்துடன் எவ்வாறு தொடர்பு கொள்ளும்?

இதற்கு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு பதில் கூறினார்கள்: உலகப் போருக்குப் பிறகு எல்லாமே அழிந்து விடும் என்று உங்களிடம் யார் கூறினார்? மூன்றாவது உலகப்போர் நடைபெறும். ஆனால் உலகின் பல பகுதிகளும் பாதுகாப்பாக எஞ்சி இருக்கும். எல்லாமே அழிந்து போய் விடாது.

மேலும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: இது நெருப்புதான். ஆனால் அற்புதங்களைக் காட்டக் கூடிய, இறைவனோடு எவர்கள் அன்பு கொள்கின்றார்களோ, அப்படிப்பட்ட அனைவரும் இந்த நெருப்பிலிருந்து பாதுகாக்கப்படுவார்கள். எனவே அல்லாஹ்விடத்தில் அன்பு கொள்ளுங்கள். அல்லாஹ்விடத்தில் தொடர்பை உறுதிப்படுத்துங்கள். பிறகு, இந்த நெருப்பிலிருந்து அதாவது உலகப் போர் என்ற நெருப்பிலிருந்து இதன் மூலம் நீங்கள் தப்பித்துக் கொள்ளலாம்.

தொடர்ந்து ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: இந்த போருக்குப் பிறகு எவர்கள் அதிலிருந்து காப்பாற்றப்படுகின்றார்களோ அவர்களுக்கு குறைந்தபட்சம் இந்த விஷயம் நன்றாகத் தெரிந்து விடும். அதாவது, போர் நடைபெறுவதற்கு முன்னதாகவே இவ்வாறு ஒரு போர் நடைபெற இருக்கின்றது என்ற செய்தி கூறப்பட்டு வந்தது என்பதை அவர்கள் நன்றாக அறிந்திருப்பர். எனவே, அதற்குப் பிறகு பல மக்களும் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வார்கள். இஸ்லாத்தில் இணைந்து விடுவார்கள் - இன்ஷா அல்லாஹ். ஒரு ஜமாஅத்திற்கும் இன்னொரு ஜமாஅத்திற்கும் இடையிலான தொடர்பு செயற்கைக்கோள் தொலைபேசி மூலமாக நடைபெறும். ஒவ்வொரு ஜமாஅத்திலும் ஒரு செயற்கைக்கோள் தொலைபேசி வைத்தால், அது தொடர்பு கொள்வதற்கு வசதியாக இருக்கும்.

அடுத்து, ஒரு வக்.்.பே நவ் பெண் இவ்வாறு கேள்வி கேட்டார். அதாவது, இளைஞர்களுடைய கையில் மருதாணி போடப்படுவதில்லை. ஆனால், திருமண வேளைகளில் மருதாணி போடப்படுகின்ற இரவில் மணப்பெண்ணுடைய சகோதரிகள் அல்லது பெற்றோர்கள் போன்றோர் ஒன்று சேர்ந்து ஏதாவது பாடலைப் பாடுவது, அல்லது மகிழ்ச்சியைக் கொண்டாடுவது அனுமதிக்கப்படுகின்றதா இல்லையா?

இதற்கு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு பதில் கூறினார்கள்: முதலில் ஷரீஅத்தில் மருதாணி போடுவது அவசியமானது என்று எங்கு எழுதப்பட்டிருக்கின்றது என்பதைக் கூறுங்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வளவுதான் எழுதியிருக்கின்றார்கள். ஷரீஅத்திலிருந்து ஷரீஅத் அடிப்படையிலும் இந்த ஒரு நிகழ்ச்சி மட்டுமே நிரூபணமாகிறது. அது திருமணத்திற்குப் பிறகு மாப்பிள்ளை கொடுக்கின்ற வலிமா நிகழ்ச்சியாகும். இது மிகவும் அவசியமானதாகும். இந்த சந்தர்ப்பத்தில் பெண்களெல்லாம் ஒன்று சேர்ந்து மகிழ்ச்சிக்காக ஏதாவது பாடலைப் பாடுகின்றார்கள் என்றால் அவ்வாறு அவர்கள் செய்யலாம். இவ்வாறே நெருங்கிய உறவினர்களிலிருந்து யாராவது வந்து அந்த நிகழ்ச்சியில் பொலிவை ஏற்படுத்துவதற்காக பாடலைப் பாடுகின்றார்கள் என்றால் அதில் எந்த குற்றமும் இல்லை. ஆனால், இவ்வாறு கண்டிப்பாகச் செய்ய வேண்டும் என்பதும் இல்லை. இவ்விஷயங்களில் அதிகம் கவனம் காட்ட வேண்டிய தேவையும் இல்லை. வீட்டினுள் அமர்ந்து சகோதர, சகோதரிகள் அல்லது பெற்றோர்கள் வேறு சில நெருங்கிய உறவினர்கள், மாமா, பெரியம்மா போன்றோர் அமர்ந்து அந்த நிகழ்ச்சியில் மகிழச்சியை ஏற்படுத்துவதற்காக ஏதாவது பாடலை பாடுகின்றனர் என்றால் அதில் எந்த குற்றமும் இல்லை.

அடுத்து ஒரு வக்.்.பே நவ் பெண் இவ்வாறு கூறினார். என்னுடைய பகுதியைச் சார்ந்த ஒரு லஜ்னா என்னிடம் இவ்வாறு கூறினார். ஒரு மருத்துவரிடம் அவர் சென்றார். அப்போது அந்த மருத்துவர் அவரை வரவேற்றவராகத் தனது கையை நீட்டினார். இந்த பெண்ணும் அந்த டாக்டரிடம் கை குலுக்கினார். நான் அந்த லஜ்னா சகோதரியிடம் இவ்வாறு கை குலுக்குவது தடை செய்யப்பட்டிருக்கின்றது என்று கூறினேன். அப்போது அவர்கள் இவ்வாறு பதில் கூறினார்கள். அதாவது, எனது உள்ளத்திலும் எந்தவொரு தீமையும் இல்லை. அவ்வாறே அந்த டாக்டரது உள்ளத்திலும் எந்தவொரு தீமையும் இல்லை. எனவே, கை குலுக்குவதால் எதுவும் ஆகி விடாது என்று கூறினார் என்று அந்த பெண் கூறியதும் ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

அந்த பெண் தவறாகக் கூறியிருக்கின்றார். உள்ளத்தில் எந்த விதமான தீமையும் இல்லை. அதனால் அவ்வாறு செய்யலாம் என்று எங்கு எழுதப்பட்டிருக்கின்றது? நான் இதற்கு முன்னரும் பலமுறை கூறியிருக்கின்றேன். இஸ்லாத்தின் எல்லா கட்டளைகளும் நடைபெறுவதற்கு சாத்தியமான எல்லா விஷயங்களையும் சூழ்ந்து நிற்கின்றது. இந்த சமுதாயத்தில் 80 அல்லது 90 சதவிகித பெண்கள் ஆண்களோடு கை குலுக்குகின்றார்கள். அவர்களுடைய உள்ளத்தில் எந்த ஒரு தீமையும் இல்லை என்று கூறுகின்றார்கள். அவ்வாறிருந்தும் கூட அல்லாஹ் இதைத் தடை செய்திருக்கின்றான் - நவூதுபில்லாஹ். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய உள்ளத்தில் பெண்களைப் பற்றிய ஏதாவது தீய எண்ணம் இருந்ததா? அல்லது பெண்களது உள்ளத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி ஏதாவதொரு தீமை இருந்ததாக நம்மால் கூற முடியுமா? ஆனால் ஹதீஸ்களில் எப்படிப்பட்ட சம்பவங்களை நம்மால் பார்க்க முடிகின்றது என்றால், பெண்களிடத்தில் பைஅத் வாங்குகின்ற சமயத்தில் கூட பெருமானார் (ஸல்) அவர்கள், நாம் பெண்களுடைய கைகளை பிடித்து பைஅத் வாங்குவதில்லை என்று கூறியிருக்கின்றார்கள்.

புகாரியில் இது பற்றிய ஹதீஸ் வருகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய பல சம்பவங்கள் ஹதீஸ்களிலிருந்து இவ்வாறு நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. பைஅத் என்பது ஒரு தூய்மையான வழிமுறையாக இருக்கின்றது. பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய உயர்வான அந்தஸ்தையும் நீங்கள் பாருங்கள். அவ்வாறிருந்தும் கூட பெருமானார் (ஸல்) அவர்கள், நான் பெண்களோடு கை குலுக்குவதில்லை என்று கூறினார்கள். பிறகு இவ்வாறான நிலையில் உள்ளத்தில் தீமை இருக்கின்றதா? இல்லையா? என்ற கேள்விக்கே இடமில்லை. இவையெல்லாம் சாக்குப்போக்குகள் ஆகும். மக்கள் இந்த சமுதாயத்திற்கு வந்த பிறகு இந்த சமுதாயத்தின் சுற்றுச்சூழலைப் பார்த்து அஞ்சுகின்றனர். தம்முடைய போதனையை அவர்கள் மத்தியில் பரப்புவதற்குப் பகரமாக, தமது போதனைகளை மற்றவர்களுக்கு எடுத்துக் கூறுவதற்குப் பதிலாக, தமது ஈமானை வலுப்படுத்துவதற்குப் பதிலாக, அவர்களது சுற்றுச் சூழலின் தாக்கத்திற்கு ஆளாகி அவர்களைப் போன்றே இவர்களும் தங்களை மாற்றிக் கொள்கின்றனர். இது ஒரு வகையில் கோழைத்தனமாகும். எனவே எந்தப் பெண் அவ்வாறு செய்திருக்கின்றாரோ அவர் மிகவும் கோழையான பெண்ணாக இருக்கின்றார்.

பிறகு இதே வக்.்.பே நவ் பெண் ஹுஸூர் அவர்களிடம் இவ்வாறு கேட்டார். எனது இரண்டாவது கேள்வி பர்தா தொடர்பானதாகும்.

சில பெண்களிடம் நீங்கள் பர்தாவை பேணுங்கள் என்று கூறப்படும்போது, அவர்கள் இங்கு எந்த ஓர் அஹ்மதியும் இல்லை. எனவே பர்தாவை பேண வேண்டிய தேவையில்லை என்று கூறுகின்றார்கள்.

இதைக் கேட்டு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: அஹ்மதிகளுக்கு முன்னால் மட்டும் தான் பர்தாவைப் பேண வேண்டுமா? இவ்வாறு எங்கு எழுதப்பட்டிருக்கின்றது? பர்தா தொடர்பான கட்டளை எப்போது வந்ததோ அதற்கு முன்னர் ஒரு யூதர் ஒரு முஸ்லிம் பெண்ணுடன் மிகவும் தவறான முறையில் நடந்து கொண்டார். எந்த அளவுக்கு என்றால் அந்த முஸ்லிம் பெண், போர்த்தியிருந்த போர்வையை அவர் இழுத்தார். அந்த போர்வையை அகற்றுவதற்கு அவர் முயற்சி செய்தார். அல்லாஹ் பர்தா தொடர்பான கட்டளையைப் பிறப்பித்திருக்கின்றான். ஆனால் அந்த கட்டளையை அல்லாஹ் கூறுவதற்கு இந்த சம்பவமும் கூட ஒரு காரணமாக அமைந்தது. எனவே அஹ்மதிகளுக்கு மத்தியில் மட்டும்தான் பர்தாவைப் பேண வேண்டும் என்று எங்குமே எழுதப்படவில்லை. அபாயம் என்பது அஹ்மதி-களிடத்திலிருந்து மட்டும்தான் வருமா? அஹ்மதி அல்லாதவர்களிடமிருந்த எந்தவோர் அபாயமும் யாருக்கும் ஏற்படாதா? திருக்குர்ஆனில் நீங்கள் முஸ்லிம்களுக்கு மத்தியில் மட்டும் பர்தாவைப் பேணுங்கள் என்று எங்குமே எழுதப்படவில்லை. திருக்குர்ஆனில் என்ன எழுதப்பட்டிருக்கின்றது என்றால், உங்களுடைய போர்வையை உங்கள் தலை மேல் இட்டுக் கொள்ளுங்கள். தலை வரை போர்வையால் மூடுங்கள். மேலும் உங்கள் முந்தானையால் உங்களது மார்புப் பகுதியை நீங்கள் மறைக்க வேண்டும் என்ற கட்டளை இருக்கின்றது. எனவே பர்தாவைப் பேணுபவர்கள் இதனைப் பேண வேண்டும். இந்தப் பெண் இவ்வாறு கூறியிருக்கின்றார் என்றால் அவர் தவறாகக் கூறியிருக்கின்றார். அந்த பெண் தன்னுடைய ஷரீஅத்தைப் பரப்புகின்றார். எனவே நீங்கள் அனைவரும் ஜமாஅத்திற்காக உங்களை அர்ப்பணித்திருக்கின்ற பெண்களாக இருக்கின்-றீர்கள். எனவே அத்தகைய பெண்களிடம் நீங்கள்தான் இவ்விஷயங்களை எடுத்துக் கூற வேண்டும். மார்க்கத்தில் புதிய விஷயங்களைப் புகுத்தாதீர்கள் என்று அவர்களுக்கு அறிவுரை கூற வேண்டும். உங்களுடைய ஷரீஅத்தை நீங்கள் பரப்பாதீர்கள் என்று கூற வேண்டும். நீங்கள்தான் இந்த மக்களை சீர்திருத்த வேண்டும். இப்போது எனக்கு முன்னால் 230 வக்ஃப் செய்த இளம்பெண்கள் அமர்ந்திருக்கின்றீர்கள். இந்த அனைத்து பெண்களும் சீர்திருத்தத்தை ஏற்படுத்துவதற்காக எழுந்து நின்று விட்டால் தானாகவே மக்களின் மூளையில் இவ்விஷயங்கள் புரிய ஆரம்பித்து விடும். பிறகு சீர்திருத்தம் ஏற்பட்டு விடும்.

பிறகு இன்னொரு பெண் வக்ஃபே நவ் பெண் பர்தா தொடர்பான இன்னொரு கேள்வியைக் கேட்டார். நீங்கள் (தலையை மறைக்கின்ற) ஸகார்ஃப் அணியக் கூடியவர்களாக இருந்தால் இந்த வேலை உங்களுக்கு கிடைக்காது என்று கூறப்படுகின்றது. இது தொடர்பாக ஹுஸூர் அவர்களுடைய கருத்து என்னவென்று அந்த பெண் கேட்டார். அதற்கு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

நீங்கள் இந்த விஷயத்தைப் பார்க்க வேண்டும். அதாவது உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குவதாக நீங்கள் உடன்படிக்கை செய்துள்ளீர்கள். இந்த உடன்படிக்கையை நீங்கள் நிறைவேற்றுகின்றீர்களா? இல்லையா? என்பது உங்களுடன் தொடர்புடைய ஒரு விஷயம் ஆகும். எனவே உங்களது மனசாட்சியிடம் இந்த கேள்வியை நீங்கள் கேட்க வேண்டும். அதாவது இந்த வேலை அவசியமானதா? என்ற கேள்வியை உங்கள் மனசாட்சியிடம் கேட்க வேண்டும். நீங்கள் பசியால் மரணித்துக் கொண்டிருக்கின்-றீர்கள் என்றால் பன்றி மாமிசத்தைச் சாப்பிடு-வதற்கான அனுமதி உங்களுக்கு இருக்கின்றது. ஆனால் நீங்கள் பசியால் மரணிக்கவில்லை. உங்களுடைய வாழ்நாளை உங்களால் கழிக்க முடியும் என்றால், பிறகு இந்த பணியைச் செய்துதான் நீங்கள் சம்பாதிக்க வேண்டும் என்ற எந்த அவசியமும் இல்லை. ஒருவர் பசியால் மரணித்துக் கொண்டிருக்கின்றார். அவருக்கு அதை தவிர வேறு எந்தவொரு வழியும் இல்லாமல் இருக்கின்றது என்றால் பிறகு அவர் அந்த பணியைச் செய்யலாம். அப்போது கூட, தற்காலிகமாக அந்த பணியைச் செய்கின்ற சமயத்தில் மட்டும் அவர் பர்தாவைக் கழற்றி வைக்கலாம். பணியைச் செய்து முடித்த பிறகு அங்கிருந்து புறப்படும்போது உடனடியாக பர்தாவை அணிய வேண்டும். அதனைப் பேண வேண்டும். சில தொழில்கள் அல்லது பணிகள் இருக்கின்றன. உதாரணமாக, விஞ்ஞானிகளாக அல்லது மருத்துவர்களாக இருப்பவர்களுக்கு, அவர்களுக்கென்று தனி ஆடை இருக்கின்றது. அதை அவர்கள் அணிய வேண்டியது வருகின்றது. அது நிர்பந்த சூழ்நிலையாகும். அங்கு அவர்கள் பர்தா அணிந்து அந்த பணியைச் செய்ய முடியாது. ஆய்வுக்கூடம் அல்லது அறுவை சிகிச்சை மையம் போன்ற இடங்களில் அதற்கென்று அவர்கள் அணிய வேண்டிய தனி ஆடை இருக்கின்றது. அதைத்தான் அவர்கள் அணிய வேண்டும். ஆனால் அந்த பணியைச் செய்து முடித்த பிறக பர்தாவைப் பேண் வேண்டியது அவசியமானதாகும்.

அடுத்து, ஒரு வக்ஃபே நவ் பெண் இவ்வாறு கேள்வி கேட்டார்: எனக்கு இரண்டு பிள்ளைகள் இருக்கின்றார்கள். அவர்களுக்கு ஒரு நோய் வந்திருக்கின்றது. அது தொடர்பாக இவ்வாறு கூறப்படுகின்றது. அதாவது, தந்தை அல்லது தாயின் உறவினர்களின் பிள்ளைகளை திருமணம் (Cousin Marriage) செய்ததன் காரணமாக இந்த நோய் வருவதாகக் கூறப்படுகிறது.

இதற்கு ஹுஸூர் இவ்வாறு கூறினார்கள்: நீங்கள் குறிப்பிடுகின்ற இந்த நோய் இங்கு ஐரோப்பாவிலும் இருக்கின்றது (அஹ்மதி அல்லாத) மற்றவர்களுக்கும் இந்த நோய் வந்திருக்கின்றது. அவர்கள் இவ்வாறு தமது தந்தை அல்லது தாயின் உறவினர்களின் பிள்ளைகளை அல்லது அவர்களில் ஒருவரை திருமணம் செய்ததன் காரணமாகவா வந்தது என்றால் நிச்சயமாக இல்லை. இந்த நோய் ஜெர்மனியில் கூட இருக்கின்றது. மக்கள் இவ்வாறு தவறாகக் கூறுகின்றனர். இவ்வாறான திருமணங்களைச் செய்து கொள்ளலாம் என்று திருக்குர்ஆன் அனுமதி தருகின்றபோது, பிறகு பல தலைமுறைகளாக இதுபோன்ற திருமணங்கள் நடைபெற்று வந்திருக்கின்றபோது, நிச்சயமாக இது ஒரு தவறான கருத்தாகும் என்பதை இது நிரூபிக்கின்றது. எனது குடும்பத்திலும் கூட பலரும் எனது தாய் மற்றும் தந்தையின் உடன்பிறந்த சகோதரர் அல்லது சகோதரிகளின் பிள்ளைகளை திருமணம் செய்திருக்கின்றார்கள். அல்லாஹ்வின் மாபெரும் அருளால் அனைவருமே உடல் நலத்துடன் ஆரோக்கியமாக இருக்கின்றார்கள்.

பிறகு இன்னொரு வக்ஃபே நவ் பெண் பர்தா தொடர்பாக இவ்வாறு கூற ஆரம்பித்தார். அதாவது, மாநாட்டுத் திடலில் புர்கா விற்கப்படுகிறது என்று கூறினார்.

இதை கேட்டதுமே ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: எந்த புர்கா ஜெர்மனியின் மாநாட்டுத் திடலில் விற்கப்படுகின்றதோ அதில் புர்காவின் அம்சம் மிகக் குறைவாகவும் ஃபேஷன் அதிகமாகவும் இருக்கின்றது. இதைத்தான் நீங்கள் கேட்கின்றீர்கள் என்று நினைக்கின்றேன். இதுதான் கேள்வி என்றால் பிறகு அப்படிப்பட்ட புர்காக்களை மாநாட்டுத் திடலில் வர அனுமதிக்கக் கூடாது. இதனை சத்ர் லஜ்னா அவர்கள் கண்காணிக்க வேண்டும். அப்படிப்பட்டவர்களுக்கு ஸ்டால் வைப்பதற்கே அனுமதி வழங்கக் கூடாது என்று ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்.

பிறகு இன்னொரு வக்ஃபே நவ் பெண் இவ்வாறு கேள்வி கேட்டார். நாங்கள் கபருஸ்தான் சென்று, எங்களது உறவினர் அல்லாத வேறு ஓர் அஹ்மதியின் கபரில் சென்று துஆ செய்யலாமா?

அதற்கு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு பதில் கூறினார்கள்: ஏன் துஆ செய்யக் கூடாது? உங்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கின்ற அஹ்மதிகளுடைய கபர்களில் நீங்கள் துஆ செய்யலாம். ஒரு நம்பிக்கை கொண்டவர் இன்னொரு நம்பிக்கை கொண்டவருக்காக பாவமன்னிப்பிற்கான துஆவைச் செய்யலாம். அதில் எந்த விதமான குற்றமும் இல்லை.

இதே வக்ஃபே நவ் பெண் இன்னொரு கேள்வியைக் கேட்டார். அவர் கூறியதாவது. எங்கள் வீட்டிற்கு ஒரு ஜெர்மன் பெண்மணி வந்திருந்தார். அவர் இந்த கேள்வியைக் கேட்டார். அதாவது அல்லாஹ் எல்லா மனிதர்களிடத்தும் அன்பு செலுத்துகிறான் என்று நீங்கள் கூறுகின்றீர்கள். பிறகு ஆப்பிரிக்காவில் மக்கள் பசியாலும் நோயாலும் மரணித்துக் கொண்டிருக்-கின்றனர். அங்கு அல்லாஹ்வின் நேசம் எங்கு சென்று விட்டது என்று அவர் கேட்டார்.

இதற்கு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: இரண்டு விதமான சட்டங்களை அல்லாஹ் ஏற்படுத்தியிருக்கின்றான். ஒன்று இயற்கைச் சட்டமாகும். மற்றொன்று ஷரீஅத் அதாவது மார்க்கத்தின் சட்டமாகும். அல்லாஹ் அன்பு செலுத்துகின்றான். அல்லாஹ் கருணை

காட்டக் கூடியவனாக இருக்கின்றான். ஆனால் ஒரு மனிதர் எந்த வேலையும் செய்யாது சோம்பேறியாக அமர்ந்திருந்தால் அவருடைய நிலை இவ்வாறான -தாகத்தான் இருக்கும். ஐரோப்பாவிலும் கூட மக்கள் நோயாளிகளாவதை நாம் பார்க்கின்றோம். அவ்வாறிருக்கும்போது, அல்லாஹ் இங்குள்ள மக்களையும் நேசிக்காமல் இருக்கின்றான் என்று அந்த பெண் கூறுவாரா? மக்கள் இந்த நாட்டிலும் கூட மரணிக்கின்றனர். அவ்வாறு மரணிக்கும் போது அல்லாஹ் அவர்களை நேசிக்கவில்லை என்று அந்த பெண் கூறுவாரா? சில இடங்களில் பூகம்பங்கள் வருகின்றன. அமெரிக்காவிலும் கூட பெரும் புயல் வந்திருக்கின்றது. உலகின் பல இடங்களில் புயல்கள் வருகின்றன. அதனாலும் கூட மக்கள் மரணிக்கின்றனர். இதனால் அல்லாஹ் அந்த மக்களை நேசிக்கவில்லை என்று பொருள் கொள்ள முடியுமா?

இவ்வாறு ஹுஸூர் அவர்கள் கேட்டதற்கு அந்த வக்ஃபே நவ் பெண், ஆப்பிரிக்காவில் இரண்டு வருடங்களாக மழையே இல்லாமல் இருக்கின்றது என்று கூறினார்.

அதற்கு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: உலகின் பல இடங்களில் பஞ்சங்கள் நிலவுகின்றன. எனவேதான் அல்லாஹ் நமக்கு இஸ்திகாரா உடைய (மழைக்கான) துஆவைக் கற்றுத் தந்திருக்கின்றான். ஆப்பிரிக்காவின் சில இடங்களில் எங்கெல்லாம் ஜமாஅத் இருக்கின்றதோ அங்கு பலரும் மழையே பெய்யவில்லை என்றும் துஆ செய்யுமாறும் கடிதம் எழுதியிருந்தனர். நான் அவர்களுக்கு இதைத்தான் கூறுகின்றேன். அதாவது, நீங்கள் திறந்த வெளியில் சென்று மழைக்கான தொழுகையைத் தொழ வேண்டும். பிறகு துஆ செய்ய வேண்டும். என்னுடைய கட்டளைக்கேற்ப அவர்கள் துஆ செய்த பிறகு அங்கு மழை பெய்திருக்கின்றது. அல்லாஹ் அருள் புரிந்திருக்கின்றான். நிலைமைகள் சரியாகி இருக்கின்றன.

ஹுஸூர் அவர்கள் தொடர்ந்து கூறினார்கள்: மழை பெய்யாததன் காரணமாகவும் கூட சில இடங்களில் இதுபோன்ற பஞ்சங்கள் நிலவுகின்றன. ஆனால், சில இடங்களில் மக்களுடைய சோம்பேறித்தனம் அல்லது அவர்களுடைய தவறுகளும் இதற்கு கரணமாக இருக்கின்றன. அதாவது, அவர்கள் பணி செய்வதே இல்லை. வெறுமனே அமர்ந்திருக்கின்றார்கள். மற்ற சமுதாயங்களிடமிருந்து கேட்டு வாங்கிச் சாப்பிடுகின்ற பழக்கத்தை உடையவர்களாக இருக்கின்றார்கள். எனவேதான் அல்லாஹ் தனது அடியார்களிடத்தில் இவ்வாறு கூறுகின்றான்: எனது ரஹம், அதாவது கருணை என்ற பண்பிலிருந்து நீங்களும் பலன் பெற வேண்டும். ஏழைகளையும் கருத்தில் கொள்ள வேண்டும். சில சமுதாயங்கள் எந்த அளவிற்கு அதிகமாக தானியங்கள், வெண்ணெய், பால், நெய் போன்றவற்றை வீணாக்குகின்றார்கள் என்றால், சில நேரங்களில் அவற்றை அவர்கள் வெளியில் எறிகின்றார்கள். எனவே, அப்படிப்பட்ட செல்வம் படைத்த சமுதாயங்கள் ஆப்பிரிக்க நாடுகளிலுள்ள மக்களுக்காக அவற்றை அனுப்பி வைக்க வேண்டும். அதன் மூலமாகக் கூட அவர்கள் மனித இனத்திற்குத் தொண்டு செய்ய முடியும்.

ஹுஸூர் அவர்கள் தொடர்ந்து கூறினார்கள்: இயற்கைச் சட்டத்தின் கீழ் பஞ்சம் நிலவுகின்ற வருடங்களும் வருகின்றன. சில சோதனையில் ஆழ்த்துவதில்லை. மக்கள் அதன் காரணமாக மரணிக்கின்றார்கள். ஆனால் அல்லாஹ் எவரையும் சோதனையில் ஆழ்த்துவதில்லை. ஏனென்றால் உண்மையான வாழ்க்கை என்பது மரணத்திற்குப் பிறகுள்ள வாழ்க்கையே ஆகும். அல்லாஹ் அந்த நிரந்தரமான வாழ்க்கையாக இருக்கக்கூடிய மறுமை வாழ்க்கையில் வழங்குகின்ற அந்த கருணைதான் உண்மையான கருணையாகும். அந்த சமயத்தில் இந்த அனைவரையும் அல்லாஹ் மன்னித்து விடலாம். கேள்வி கணக்கு கூடக் கேட்காமல் அவர்களை விட்டு விடலாம். இதுவும் கூட அல்லாஹ்வின் கருணையே ஆகும். நாம் இந்த விஷயத்தில் உறுதியான நம்பிக்கை கொண்டவர்களாக இருக்கின்றோம். அதாவது, உண்மையான வாழ்க்கை மறுமையின் வாழ்க்கையே. மன்னிப்பு அந்த சமயத்தில் அதாவது மறுவுலக வாழ்க்கையில் தனது காட்சியை நிச்சயமாக அவர்களுக்குக் காட்டும்.

பிறகு ஒரு வக்ஃபே நவ் பெண் இவ்வாறு கேள்வி கேட்டார்: ஒரு வீட்டில் ஓர் ஆணும் ஒரு பெண்ணும் இருக்கும்போது, இமாம் முன்னால் நின்று தொழ வைக்க வேண்டுமா அல்லது ஒரே ஸஃப்பில் இருவரும் ஒன்றாக நிற்கலாமா?

இதற்கு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு பதில் கூறினார்கள்: கணவன் மனைவியாக இருந்தால் அல்லது சகோதர சகோதரியாக இருந்தால் அவர்களில் எவர் ஆணாக இருக்கின்றாரோ அவர் முன்னால் சென்று நிற்பார். பெண் பின்னால் நின்று தொழ வேண்டும். ஆனால் சில சமயங்களில் அந்த ஆணோடு இணைந்து பெண் நிற்கலாம். உதாரணமாக, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது உடல் நலம் மிகவும் மோசமாக இருந்த சமயத்தில் அவர்கள் பள்ளிவாயிலுக்கு வராமல் வீட்டிலேயே தொழுது வந்தார்கள். அப்போது ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களைத் தம்மோடு சேர்த்து அவர்கள் நிற்க வைத்துக் கொண்டார்கள். ஆனால் பொதுவாக மற்ற நாட்களில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்குப் பின்னால் நின்று தான் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் தொழுது வந்தார்கள். சில நேரங்களில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், எனக்கு தொழுகையின்போது தலைசுற்றல் வந்து விடலாம். எனவே, நீங்கள் எனக்கு அருகில் நின்று கொள்ளுங்கள் என்றும் கூறியிருக்கின்றார்கள். அதாவது, அவர்கள் தொழுது கொண்டிருக்கும் போது திடீரென்று தலைசுற்றல் வந்து விட்டால் அவர்களுக்கு ஆதரவாக நிற்பதற்கு ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் தேவைப்பட்டார்கள். அவ்வாறு நிற்காமல் இருந்தால் நான் ஒருவேளை கீழே விழுந்து விடலாம் என்றும் கூட ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறி இருந்தார்கள். எனவே, அடிப்படையான தீர்ப்பு இதுவே ஆகும். அதாவது பின்னால்தான் நிற்க வேண்டும். ஆனால் இஸ்லாம் எளிமையான மார்க்கமாகும். அது கடுமையை விரும்புகின்ற மார்க்கமல்ல. எனவே நிர்பந்தமான சூழ்நிலையில் ஆணுக்கு அருகில் நின்று தொழலாம்.

இதே வக்ஃபே நவ் பெண் இறுதியாக இந்த கேள்வியைக் கேட்கின்றேன் என்று கூறி விட்டு இந்த கேள்வியைக் கேட்டார். அதாவது, ஒரு தாய் தனது குழந்தைகளை வக்ஃப் செய்ய விரும்புகின்றார். ஆனால் வீட்டிலுள்ளவர்கள் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. இந்நிலையில் என்ன செய்வது?

இதற்கு ஹுஸூர் அவர்கள் பதில் கூறினார்கள்: இந்நிலையில் அவர் அதிகமாக துஆ செய்ய வேண்டும். தனது கணவரை தனது பிள்ளையை வக்ஃப் செய்வதை ஏற்றுக்கொள்ளும்படி அவர் செய்ய வேண்டும். கணவன், மனைவி ஆகிய இருவருக்கும் தமது பிள்ளையை வக்ஃப் செய்வதில் விருப்பம் இருந்தால் பிறகு வக்ஃப் செய்து விட வேண்டும்.

பிறகு அந்த வக்ஃபே நவ் பெண் தொடர்ந்து கேட்டார். எனக்கு இரண்டு பிள்ளைகள் இருக்கின் -றார்கள். இரண்டு பிள்ளைகளையுமே நான் வக்ஃப் செய்து விட்டேன். இன்னொரு பிள்ளை வக்ஃபே நவ் திட்டத்தில் பங்கு பெறவில்லை என்று கூறினார்.

அதற்கு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: எந்த குழந்தை வக்ஃபே நவ் திட்டத்தில் இணைய -வில்லையோ அதற்கு நீங்கள் எவ்வாறு தர்பிய்யத் வழங்க வேண்டுமென்றால் அந்த குழந்தை வாலிப வயதை அடைந்த பிறகு சுயமே தன்னை ஜமாஅத்திற்காக அர்ப்பணிக்க வேண்டும். அவரே தன்னை வக்ஃப் செய்ய வேண்டும். ஜமாஅத்திற்கு தொண்டு செய்வது மட்டுமே நமது நோக்கமாக இருக்கின்றது. அதை அந்த குழந்தை பெரியவன் ஆன பிறகு செய்யலாம். நானும் கூட வக்ஃபே நவ் திட்டத்தில் இருக்கவில்லை. ஆனால், நான் என்னை பிறகு ஜமாஅத்திற்காக அர்ப்பணித்தேன். என்னை நான் வக்ஃப் செய்தேன்.

இவ்வாறு இந்த வாகிஃபாத்தே நவ் அதாவது ஜமாஅத்திற்காகத் தமது வாழ்வை அர்ப்பணித்த இளம்பெண்கள், ஹுஸூர் அவர்களுடன் கலந்து கொண்ட இந்த கேள்வி-பதில் நிகழ்ச்சி ஏறக்குறைய 50 நிமிடங்கள் நடைபெற்ற பிறகு நிறைவை அடைந்தது.

பிறகு ஹுஸூர் அவர்கள் திருக்குர்ஆனை ஓதி முடித்த குழந்தைகளுக்காக பள்ளிவாயிலில் நடைபெற்ற ‘ஆமீன்’ நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டார்கள். இந்த நிகழ்ச்சியில் முப்பதிற்கும் மேற்பட்ட சிறுவர் சிறுமியர் திருக்குர்ஆனின் ஒவ்வொரு சூராவையும் ஹுஸூர் அவர்களிடம் படித்துக் காட்டினார்கள். அதற்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் இறுதியில் துஆ செய்தார்கள்.

இதற்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் ளுஹர் மற்றும் அஸ்ர் தொழுகையை சேர்த்து தொழ வைத்தார்கள். தொழுகைக்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் தாம் தங்கியிருந்து இடத்திற்கு திரும்பிச் சென்றார்கள்.

*(தொடரும்...)*

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : +91 98885-67232
SUB EDITOR
RAFEEQ AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly **BADAR** Qadian

பதர் வாரப் பத்திரிகை காதியான்

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 | Vol. 3 Thursday 31 May 2018 | Issue No. 22

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)

அளிப்பதற்காகவும் ஆங்கிலேயே அரசு செய்ய வேண்டிய ஏற்பாடு என்னவெனில், நீங்கள் நம்பிக்கை வைத்து வரும் உங்களுடைய இறைவனிடம் அல்லது இறைவனுக்கு பதிலாக வேறு எவரையாவது தங்களது தெய்வமாக நம்பி இருப்பவரிடம் துன்பத்திற்குள்ளாகி இருப்பவர்களுக்காக பரிந்துரை செய்து அவரிடமிருந்து உறுதியான வாக்குறுதி பெற்று நாம் இந்தப் பிரசுரத்தை வெளியிட்டதைப்போல் நீங்களும் பிரசுரங்களை வெளியிடுங்கள். இவ்வாறு செய்வதில் முற்றிலும் மக்களின் நலன்களும் தம் மதத்தின் உண்மை ஆதாரமும் காணப்படுவதோடு மட்டுமல்லாமல், அரசிற்கும் இது உதவியாக இருக்கும். ஏனெனில், தனது குடிமக்கள் பிளேக்கின் அழிவிலிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டும் என்பதே அரசின் விருப்பமாகும்.

இறுதியாக நினைவில் கொள்ளுங்கள். நாம் இந்த பிரசுரத்தில் இந்தியாவிலும், பஞ்சாபின் பல்வேறு பகுதிகளிலும் பரவியிருக்கும் நமது ஜமாஅத் தடுப்பூசி போட்டுக் கொள்வதை நாம் தடை செய்யவில்லை. எவர்களைப் பற்றி அரசின் கட்டாயமான கட்டளை காணப்படுமோ அவர்கள் அவசியமாக தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும். மேலும், அரசின் ஆணைக்கும் கீழ்ப்படிய வேண்டும். மேலும், தங்களின் விருப்பப்படி விடப்பட்டவர்களும் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட இப்போதனையின் மீது முழுமையாக நிலைத்திருக்க முடியாவிட்டால் அவர்களும் தாம் தடுமாற்றம் அடையாமல் இருப்பதற்காகவும் தமது மோசமான நிலையின் காரணத்தால் இறைவனது வாக்குறுதியைப் பற்றி மக்களை ஏமாற்றாமல் இருப்பதற்காகவும் தடுப்பூசி போடுவதே பொருத்தமானதாகும்.

எத்தகைய போதனையை முழுமையாக பின்பற்றினால் பிளேக்கின் தாக்குதலிலிருந்து நம்மை காப்பாற்ற முடியும் என்ற கேள்விக்கு எமது விடையை சுருக்கமாக கீழே குறிப்பிடுகிறேன்.

மன உறுதியுடன் பைஅத் என்றும் உடன்படிக்கையின்படி முழுமையாகச் செயல்படாமல் வெறும் நாவால் மாத்தரம் பைஅத்தை அங்கீரிப்பதால் எவ்வித பலனும் உண்டாகப் போவதில்லை என்பதை அறிவீர்களாக. ஆகவே, எவர் எனது போதனையின்படி முழுமையாகச் செயல்படுகிறாரோ அவர் இறைவனால் வாக்குறுதியளிக்கப்பட்ட எனது இல்லத்தில் நுழைந்து விடுகிறார். அவரைப் பற்றியே இறைவனது வார்த்தையில் إِنِّيْ أُحَافِظُ كُلَّ مَنْ فِي الدَّارِ என்ற வாக்குறுதியை அளித்துள்ளான். அதாவது, உமது வீட்டின் நான்கு சுவர்களுக்குள் இருக்கும் ஒவ்வொருவரையும் நான் காப்பாற்றுவேன். இந்த இடத்தில் மண்ணாலும் கல்லாலும் கட்டப்பட்ட எனது வீட்டில் குடியிருக்கும் மக்கள் மட்டும் காப்பாற்றப்படுவார்கள் என்று யாரும் நினைக்க வேண்டாம். மேலும், என்னை முழுமையாக பின்பற்றுவதின் மூலம் எனது ஆன்மீக வீட்டில் நுழைபவர்களும் காப்பாற்றப்படுவார்கள்.

பின்பற்றுவதற்கு ஞாபகம் வைக்க வேண்டிய விஷயம் என்னவெனில், வல்லமையுள்ளவனும், தானும் நிலைத்து மற்றவர்களையும் நிலைத்திருக்கச் செய்பவனும், எல்லாவற்றையும் படைத்த இறைவன் ஒருவன் அவர்களுக்கு இருக்கிறான் என்பதனை உறுதியாக நம்ப வேண்டும். அவ்விறைவன் தனது பண்புகளில் ஆதி முதல் எல்லா காலங்களிலும் எவ்வித மாற்றமும் இல்லாதவனாய் இருக்கிறான். அவன் யாருடைய மகனுமில்லை. அவனுக்கு எந்த மகனுமில்லை. அவன் துக்கத்தை அனுபவிப்பதிலிருந்தும் சிலுவையில் அறையப்படுவதிலிருந்தும் மரணிப்பதிலிருந்தும் தூய்மையானவனாவான். அவன் எப்படிப்பட்டவனென்றால், அவன் தூரத்தில் இருந்த போதிலும் மிக அருகிலேயே இருக்கிறான். அவன் அருகில் உள்ளவனாயிருந்தும் தூரத்திலேயே இருக்கிறான். அவன் ஏகனாய் இருந்த போதிலும் அவனது 'தஜல்லிய்யாத்' எனப்படும் தோற்றங்கள் வெவ்வேறானவையாய் இருக்கின்றன. மனிதனிடமிருந்து ஒரு புதுவிதமான மாற்றம் வெளியாகும் போது அவனுக்காக அவன் ஒரு புதிய இறைவனாகி விடுகிறான். மேலும் புதிய தோற்றத்துடன் அவனோடு நடந்து கொள்கிறான். ஒருவன் எந்த அளவில் தன்னிடத்தில் ஒரு மாற்றத்தை மேற்கொள்வானோ அதனை கவனத்தில் கொண்டே இறைவனிடத்திலும் அவன் ஒரு மாற்றத்தைக் காண்கிறான். ஆனால், இறைவனிடத்தில் ஒரு மாற்றம் உண்டாகி விடுகிறது என்பது இதன் பொருள் அல்ல. ஏனெனில், அவன் ஆதியிலிருந்தே எவ்வித மாற்றமும் இல்லாதவனும் முழுமைத் தன்மை கொண்டவனுமாக இருக்கிறான். ஆயினும், மனிதனிடம் மாற்றம் உண்டாகும்போது அந்த மாற்றம் நன்மையின் பக்கம் உருவானால் அப்போது இறைவனும் ஒரு புதிய தோற்றத்துடன் அவனிடம் வெளிப்படுகிறான். மேலும், மனிதன் நன்மையின் பக்கம் முன்னேறும் ஒவ்வொரு நிலையிலும் இறைவனது சக்தி வாய்ந்த 'தஜல்லி' எனப்படும தோற்றமும் ஒரு மேலான முன்னேற்றத்துடன் வெளிப்படுகிறது.

வழக்கத்திற்கு அப்பாற்பட்ட மாறுதல் வெளிப்படும் இடத்திலேயே அவன் அந்த வழக்கத்திற்கு அப்பாற்பட்ட ஆற்றலின் தோற்றத்தைக் காட்டுகிறான். இதுவே அற்புதங்களுக்கும் அடையாளங்களுக்கும் உள்ள அடிப்படையாகும். இத்தகைய இறைவனே நமது உடன்படிக்கையில் கூறப்படுகின்ற இறைவன் ஆவான். இந்த இறைவன் மீது நம்பிக்கை கொள்ளுங்கள். நீங்கள் உங்கள் உயிரை விட உங்கள் உலக சுகபோகங்களை விட மேலும், அதன் எல்லா வித தொடர்புகளையும் விடவும் மிக மேலான இறைவனுக்கே முன்னுரிமை வழங்குங்கள். அவனது வழியில் உண்மையையும் நன்றியுணர்வையும் தைரியத்துடன் செயல்முறையில் காட்டுங்கள். உலகமானது தனது பொருட்களை விட தனது இன பந்தங்களை விட அவனுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. ஆனால், நீங்கள் அவனுக்கே முக்கியத்துவம் கொடுங்கள். இவ்வாறு நீங்கள் செய்வீர்களேயானால் வானத்தில் அவனது ஜமாஅத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள்.

***(கிஷ்தி நூஹ். ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 9-11)***

## வக்ஃபே நவ் மாணவன்

மேலப்பாளையம் ஜமாஅத்தைச் சார்ந்த ஜனாப் A. அப்துல் நிஸார் சாஹிபின் மகன் **A.N. அப்துல் ஃபாத்திர்** பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் **500-க்கு 481** மதிப்பெண்களைப் பெற்று பள்ளியில் மூன்றாம் இடத்தில் தேர்ச்சி பெற்றுள்ளார் – அல்ஹம்துலில்லாஹ்.

பொதுத் தேர்வில் இவர் **95%** –ற்கும் அதிகமான மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெறுவதற்காக, ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களிடம் துஆவிற்காக கடிதம் எழுதப்பட்டது. அல்லாஹ்வின் அருளால் இவர் **96.2%** மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அல்லாஹ் இவருக்கு, காலத்தின் கலீஃபாவின் விருப்பத்தின்படி முழுமையாக தொண்டாற்றும் நல்வாய்ப்பினை வழங்குவதற்காக அனைத்து சகோதர, சகோதரிகளும் துஆ செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

– துணை ஆசிரியர்.

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad